விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 18 புதன்கிழமை (30.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 133




## மேர்வின் சில்வா விபத்தில் காயம்

(கொழும்பு)

அரலகன்வில பகுதியில் நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் அமைச்சர் மேர்வின் சில்வா காயமடைந்துள்ளார்.

அமைச்சர் மேர்வின் சில்வாவுடன் பயணம் செய்த களனி பிரதேச சபைத் தலைவர் சீவலி களனிதிஸ்ஸ சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் தலைமைக்கு மே நாள் வரை காலக்கெடு

(கொழும்பு)

மே தினத்திற்கு முன்பாக கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவு குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜே.வி.பி தலைமை முன்வராவிடின் புதிய அரசியல் கட்சி ஒன்றை உருவாக்கப் போவதாக ஜே.வி.பியின் முன்னாள் பிரசார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜே.வி.பியிலிருந்து ஏற்கனவே பிரிந்து சென்று அரசுடன் இணைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரான நந்தன குணதிலக்கவின் ஆதரவுடனேயே (10 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்றும் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இருந்து பிற மாவட்டத்திற்கு பிரயாணம் மேற்கொள்வதற்கான கப்பல் சேவை இன்று புதன்கிழமையும் காலநிலை சீரின்மையால் நடைபெறாது எனவும் கப்பல் சேவை இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் கப்பல் கம்பனி அறிவித்துள்ளதாக திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (ச)

# இலங்கை - ஈரான் உறவால் அமெரிக்கா கடும் கவலை

## ஈரான் ஜனாதிபதியின் பயணம் குறித்து அவதானிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் ஏற்பட்டு வரும் நெருக்கம் குறித்து அமெரிக்கா மிகுந்த கவலை வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக வாஷிங்டனில் கருத்து வெளியிட்டுள்ள இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் ரொம் ஹசி, ஈரானிய ஜனாதிபதியின் தெற்காசிய விஜயம் குறித்துத் தாம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)



ஈரான் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற மாநாட்டில்...

## வடக்கு - கிழக்கு மக்களுக்கான உணவு அளவை மாற்றியமைக்கத் திட்டம்

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இடம்பெயர்ந்த நிலையில் வாழும் மக்களுக்கான உணவு விநியோகத்தின் அளவை மாற்றியமைக்கப் போவதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

ஐ.நாவின் உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான இயக்குநர் முகமதி அசீம், பி.பி.ஸி. சந்தேசியாவுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்ததாவது,

இலங்கையில் உணவுப் பொருள்களின் விலையுயர்வு காரணமாக ஒரு தாக்கம் ஏற்பட்டுள்ளது. உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படுகின்ற அரிசி, பருப்பு, மா, எண்ணெய் ஆகிய பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

அரசாங்கத்துடன் முன்னுரிமை தரவேண்டியவை பற்றி விவாதித்து, இடைக்காலத்தில் எமக்குக் கிடைக்கும் உணவுப் பொருள்களினை வைத்து சில மாறுதல்களைச் செய்ய உடன்பாடு காணப்பட்டுள்ளது.

உள் நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள், இடம்பெயர்ந்து தத்தம் வீடுகளுக்கு திரும்பி உள்ளவர்கள், பொருளாதார ரீதியாகப் பல வீனமானவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாடசாலைச் சிறுவர்கள், ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு மட்டும் உண்பவர்கள் போன்றவர்களே தற்போதைய சூழ்நிலையில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டியவர்கள்.

உலக உணவுத் திட்டத்தினைப்பெறும் மக்கள் எந்தப் பகுதிகளிலும் பாதிக்கப்படவில்லை என்றும் இந்தத் திட்டத்தினால் பயனடையும் குழுக்கள் எதுவும் பாதிக்கப்படவில்லை என்றும் தற்போது இத் திட்டம் மந்தப்படுத்தப்பட்டுள்ளதாகவும் நிதியுதவி கிடைக்கப் பெற்றதும் முழுமையாக மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (ச-2)

## கொக்குவிலில் நேற்றிரவு இளைஞன் சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு ஆடியபாதம் வீதியில் நேற்றிரவு இளைஞன் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றிரவு 7.15 (10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரித்தானியாவில் 3 தமிழர்கள் கைது

பிரித்தானியாவில் அச்சகம் ஒன்றில் பணியாற்றிய மூவர் ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் இவர்களுக்கு தொடர்பிருப்பதாகத் தெரிவித்தே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## இலங்கை விஜயத்தை நிறைவு செய்த ஈரான் ஜனாதிபதி இந்தியா பயணம்

(கொழும்பு)

தெற்காசிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டு இரண்டு நாள்கள் இலங்கையில் தங்கியிருந்த ஈரான் ஜனாதிபதி மஹ்மூட் அஹ்மட் நிஜாத் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நேற்று இந்தியாவுக்குப் பயணமானார்.

இந்தியாவில் தங்கியிருக்கின்ற காலத்தில் இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டேல், பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இந்த விஜயத்தில் இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்படும்.

ஈரான் ஜனாதிபதி இலங்கையில் தங்கியிருந்த இரண்டு (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மதியுரைஞர் பதவியை வை.கோவிற்கு வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மதியுரைஞர் பதவிக்கு இந்திய அரசியல் பிரமுகர்களுள் ஒருவரான வை.கோவை நியமிக்க அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மறைந்த அன்ரன் பாலசிங்கம் வகித்த மதியுரைஞர் பதவி தற்போது வெற்றிடமாக உள்ளதால் அப்பதவிக்கு உகந்தவர் வை.கோ என்று விடுதலைப் புலிகள் இயக்கம் தீர்மானித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சிறந்த உதவியாளராக விளங்கிவரும் வை.கோவை அப்பதவியில் நியமிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக (10 ஆம் பக்கம் பார்க்க)

# சட்டத்தரணிகளின் பணிப்புறக்கணிப்பு திட்டமிட்டவாறு ஆரம்பமாகும்

## சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு சட்டத்தரணிகளின் நீதிமன்றப் பணிப்புறக்கணிப்பு திட்டமிட்டபடி நடைபெறும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்க வடக்கு வலயத்திற்கான உப தலைவர் சாந்தா அபிமன்னசிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

யாழ்.குடாநாட்டின் சகல நீதிமன்றங்களிலும் பணியாற்றும் யாழ்.குடாநாட்டுச் சட்டத்தரணிகளின் நீதிமன்றப் பணிப்புறக்கணிப்பு தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்க வடக்கு வலயத்திற்கான உப தலைவர் பத்திரிகைகளில் வெளியிட்ட அறிவித்தல் தொடர்பாக 29.04.2008 திகதி பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட செய்திகளை, பணிப்புறக்கணிப்பு செய்யவுள்ள யாழ்.குடாநாட்டு சட்டத்தரணிகள் வன்மையாக மறுக்கிறார்கள்.

யாழ்.குடாநாட்டு நீதிமன்றங்களிற் தோன்றும் 40 சட்டத்தரணிகளில் 35 சட்டத்தரணிகள் கடந்த 26.04.2008 திகதி ஏகமனதாக எடுத்த தீர்மானத்துக்கு அமையவே 02.05.2008 திகதி தொடக்கம் யாழ்.குடாநாட்டு நீதிமன்றப் பணிகளை புறக்கணிப்பதென முடிவு செய்யப்பட்டது.

29.04.2008 திகதி பத்திரிகைகளில் வெளிவந்த அறிவித்தலின்படி இந்த புறக்கணிப்பு செய்தி பற்றித் தமக்கு எதுவும் தெரியாது என்று யாழ்.நீதிமன்ற வளாகத்தில் கடமையாற்றும் சட்டத்தரணிகள் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி அவர்களிடம் தெரிவித்துள்ளார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தவர்கள் எவராவது இருப்பின் அவர்கள் சட்டத்தரணிகளின் உரிமைகள் பற்றிய அக்கறையற்ற ஓரிருவர் மட்டுமே.

சட்டத்தரணிகளின் பணிப்புறக்கணிப்பு தொடர்பில் எந்த மாற்றமும் இல்லை என்பது மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

இதேவேளை இந்த பணிப்புறக்கணிப்பால் வழக்குகளின் கட்சிக்காரர்கள் பாதிப்புக்களுக்கு உள்ளாகாமல் இருக்கும் வகையில் அவர்கள் தங்களின் வழக்குத் தவணைகளுக்கு நீதிமன்றங்களிற் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

29.04.2008 திகதி இப்பணிப்புறக்கணிப்பு தொடர்பாக பத்திரிகைகளில் வெளிவந்த அறிவித்தலிற் காணப்படும் ஏனைய விடயங்கள் குறித்து இப்பொழுது விவாதிக்க, பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவிருக்கின்ற சட்டத்தரணிகள் விரும்பவில்லை.

தேவை ஏற்படும்போது சகல விபரங்களும் வெளியிடப்படும் என்றுள்ளது. (ஏ)

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசைத் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

கல்லூரியின் இந்துமா மன்றத் தலைவர் தலைமையில் நடைபெறும் குருபூசை தின நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புத்துறை வருகை விரிவுரையாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் 'திருநாவுக்கரசரின் வாழ்வும் வளமும்' எனும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ச)

* * *

(யாழ்ப்பாணம்)

யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் இன்று காலை 8.30 மணிக்கு திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நிகழ்வு நடைபெறவுள்ளது. (ச)

# வடக்கு-கிழக்கை இணைப்பதற்கு இந்திய அரசாங்கம் விரும்புகிறது

## இரா.சம்பந்தன் பேட்டி

இந்திய-இலங்கை ஒப்பந்தப்படி வடக்கு-கிழக்கை மீண்டும் இணைக்க இந்தியா விரும்புகிறது என இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

த நேசன் ஆங்கில வார ஏட்டிற்கு அவர் அளித்த நேர்காணலிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அவரது பேட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

*கேள்வி:* வடக்கில் நடைபெறும் போர் அப்பாவிப் பொதுமக்களுக்கு பாரிய தலையிடியாக அமைந்துள்ளது. அண்மைக் காலமாக பல அழுத்தங்களை பொதுமக்கள் எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. இது தொடர்பாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் கருத்து...?

*பதில்:* இது மிகவும் துயரமான சூழ்நிலையாகும். இரண்டு தரப்பிலும் பெரும் எண்ணிக்கையானோர் கொல்லப்படுகின்றனர். போராளிகளும் படையினரும் உயிரிழக்கின்றனர். இந்தப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வை உருவாக்க முடியும் என்பதே எனது கருத்தாகும். ஆயுதம் தரிக்காத பெண்கள், ஆண்கள், குழந்தைகளும் இந்தப் போரின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கின்றனர்.

தமது சொந்த இடங்களை விட்டுவெளியேறி அகதிகளாக வாழ்க்கை நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. போர்ச் செலவீனங்களினால் இலங்கைப் பொருளாதாரம் மோசமான வகையில் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த அனைத்து விளைவுகளும் மேலும் மேலும் பாதிப்புக்களை ஏற்படுத்தும். இனிவரும் மாதங்களில் இந்த நிலைமை மேலும் உக்கிரமடையக் கூடும்.

*கேள்வி:* இந்த நிலைமையின் கீழ் சமாதான முன்னெடுப்புக்களுக்கு ஏதேனும் வாய்ப்புக்கள் உண்டா?

*பதில்:* ஒரு தலைப்பட்சமாக போர் நிறுத்த உடன்படிக்கையை அரசாங்கம் இரத்துச் செய்தமை ஒரு முட்டாள்தனமான செயலாகவே நான் உணர்கிறேன். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை சமாதான முன்னெடுப்புகளுக்கு விழுந்த பாரிய அடியாகும். இந்த நிலைமையின் கீழ் அரசாங்கமே சமாதானம் குறித்து அதிக முனைப்புக்காட்ட வேண்டும்.

*கேள்வி:* அரசாங்கம் மாகாணசபை தேர்தல்களை நடத்த தீர்மானித்தது குறித்து தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கருத்து என்ன?

*பதில்:* தனி கிழக்கு மாகாணம் என்ற எண்ணக்கரு ஓர் உசிதமான தீர்வாக நாம் கருதவில்லை. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு-கிழக்கு மாகாணமாகவே நாம் கருதுகின்றோம். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய அரசாங்கம் செயற்படுகிறது. இலங்கை சட்டங்களின் அடிப்படையில் இந்த தீர்ப்புக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாமை மிகவும் துரதிர்ஷ்டவசமானதொன்றாகும்.

எனினும் இந்தத் தீர்ப்பை எம்மால் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. அரசாங்கம் அனைத்துலக ரீதியில் செய்துகொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தத்துக்கு மரியாதை அளிக்க கற்றுக்கொள்ள வேண்டும். உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை மீறி கிழக்கு மாகாண் சபைத் தேர்தல்களை நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளில் எமக்கு உடன்பாடில்லை. இதனால்தான் நாம் கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடவில்லை. இதனை ஓர் ஜனநாயக தேர்தலாக ஏற்றுக்கொள்ள முடியாது. அரசாங்கம் துணை இராணுவக் குழுக்களுடன் இணைந்தே தேர்தலில் போட்டியிடுகிறது.

*கேள்வி:* வடக்கு-கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க இலங்கை சட்டங்களில் வாய்ப்பு இல்லை என்று நீங்கள் குறிப்பிட்டீர்கள். இதற்கு எதிராக உங்களின் கட்சி சர்வதேச நீதிமன்றத்தில் நியாயம் கோருமா?

*பதில்:* இது தொடர்பாக எமது கட்சி மிகக் கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றது. வடக்கு-கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டமை தொடர்பாக பலமுறை நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளோம்.

*கேள்வி:* அரசாங்கம் தற்போது கிழக்கில் தேர்தல்களை முன்னெடுக்கின்றது. கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களின் பின்னர் கிழக்கு மாகாணத்தில் எத்தகையதொரு சூழ்நிலை காணப்படும்?

*பதில்:* இந்திய -இலங்கை ஒப்பந்தத்தை நான்கு அரச தலைவர்கள் ஏற்றுக் கொண்டனர். தொடர்ச்சியாக 18 ஆண்டுகள் ஆட்சி வகித்த அரச தலைவர்கள் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டனர். இந்தக் காலப்பகுதியில் ஆட்சி செய்த நான்கு அரச தலைவர்களும் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பை ஏற்றுக்கொண்டனர். வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பான ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் அணுகுமுறையை முற்றிலும் பிழையாக நாம் கருதவில்லை.

*கேள்வி:* நீங்கள் தேர்தலில் போட்டியிடாத காரணத்தினால் உங்களின் ஆதரவாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பது பற்றி கவனம் செலுத்தவில்லையா?

*பதில்:* ஆம். எனினும் எம்மைப் பொறுத்தவரை இது ஓர் புத்திசாதுரியமான தேர்தல் உபாயமாக கருதுகின்றோம். சில அடிப்படை கொள்கைகளில் இருந்து விலகிச் செயற்படுவதில் எமக்கு உடன்பாடில்லை. குறிப்பாக சிலவற்றை விட்டுக் கொடுப்பதன் மூலம் அரசாங்கம் கிழக்குத் தேர்தல்களை நியாயப்படுத்த ஏதுவாக அமைந்துவிடும்.

எங்களின் ஆதரவாளர்கள் இந்த அரசாங்கம் பற்றி நன்கு அறிவார்கள். எனவே இந்தத் தேர்தலில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதுபற்றி அவர்கள் சரியான தீர்மானம் எடுப்பார்கள்.

*கேள்வி:* நீங்கள், ஐக்கிய தேசியக்கட்சி-சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட்டணிக்கு ஆதரவு தெரிவிக்குமாறு உங்களின் ஆதரவாளர்களிடம் கோரியிருப்பதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இது குறித்து?

*பதில்:* நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்காகவோ அல்லது வேறு எந்தவொரு அரசியல் கட்சிக்காகவோ பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. எனினும் இந்த அரசாங்கத்தின் ஆட்சியின்போது எமது மக்களுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றி நாம் நினைவுபடுத்த விரும்புகின்றோம். இருப்பினும் மக்கள் சுயாதீனமான தீர்மானத்தை எடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்குமா என்பது கேள்விக்குறியாக அமைந்துள்ளது.

சுதந்திரமான செயற்றிறன் மிக்க தேர்தல் அவதானிப்பாளர்கள் உள்ளனரா என்பது பற்றி எமக்குத் தெரியாது. சில தேர்தல் கண்காணிப்பாளர்கள் குறித்து ஏற்கனவே சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தேர்தல் ஆணையமும் அரசியல் கட்சிகளும் எத்தகைய நடவடிக்கை எடுக்கும் என்பது பற்றி சொல்ல முடியாது. எனினும் இதுவரையில் மிகக் கடுமையான தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் நடை பெறுவதாகத் தெரியவில்லை.

*கேள்வி:* சில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இந்தியாவின் தலையீட்டின் மூலம் கிழக்குத் தேர்தல்களை நிறுத்த முயற்சிகள் மேற்கொண்டனர். எனினும் அது பலனளிக்கவில்லை. உங்களின் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும்?

*பதில்:* எமது நிலைப்பாட்டை இந்தியாவிற்குத் தெரிவித்தோம். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி வடக்கு-கிழக்கை மீண்டும் இணைக்கப்படுவதனையே இந்தியா விரும்புகிறது.

மகிந்த அரசாங்கம் இந்தியாவுடனான நட்புறவு காரணமாக இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை மீறிச் செயற்படாது. கிழக்குத் தேர்தலானது வடக்கு-கிழக்கு மாகாணத்தை மீள இணைப்பதற்கு ஒரு தடையாக அமையாது என்பதே எமது கருத்தாகும்.

*கேள்வி:* போர் நிறுத்த உடன்படிக்கை இரத்து; வடக்கு-கிழக்கு மாகாணப் பிரிப்பு போன்றவை தொடர்பாக இந்திய அரசாங்கம் எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை. இது குறித்து உங்களின் கருத்து...?

*பதில்:* இந்தியா மௌனம் சாதிக்கிறது என்று குறிப்பிட முடியாது. இந்திய-இலங்கை ஒப்பந்தம் குறித்து இந்தியா நிச்சயம் கருத்துத் தெரிவிக்கும். ஆனால் எப்போது, எவ்வாறு என்பதே கேள்விக்குறியாக அமைந்துள்ளது. இதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

*கேள்வி:* வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்து பொதுவாக தமிழ் மக்களினதும் உங்களின் கட்சியினதும் நிலைப்பாடு என்ன?

*பதில்:* அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளின் மூலம் எவ்வித பயனும் எட்டப்படப் போவதில்லை. வடக்கு-கிழக்கை மீள ஒன்றிணைப்பதற்காக சட்டரீதியாக போராட்டங்களை நாம் கடுமையாக முன்னெடுப்போம்.

சமாதான முன்னெடுப்புக்களின் மைல்களாக நாம் வடக்கு-கிழக்கு இணைப்பைக் கருதுகின்றோம். இந்தியா உள்ளிட்ட ஏனைய நாடுகள் இது குறித்து அழுத்தம் கொடுத்து வந்தன.

*கேள்வி:* மனித உரிமை தொடர்பான விவகாரங்கள் மோசமடைந்து வரும் வேளையில் அனைத்துலக சுயாதீன வல்லுனர்கள் குழுவும் வெளியேறியுள்ளது. இது குறித்து உங்கள் கருத்து...?

*பதில்:* அனைத்துலக சுயாதீன வல்லுனர்கள் குழுவின் நிலைப்பாட்டில் அவர்கள் உறுதியாகவே இருக்கின்றனர்.

சுயாதீன குழுவின் வல்லுனர் சிறிலங்காவில் பணியாற்ற முடியாதுள்ளமை ஓர் துர்ப்பாக்கிய நிலையாகவே நாம் கருதுகின்றோம். இந்த நிலையானது சிறிலங்கா தொடர்பான அனைத்துலக சமூகத்தின் நன்மதிப்பை மேலும் வலுவிழக்கச் செய்யும்.

இவ்வாறு அப் பேட்டியில் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார். (ச-5)

## நூலகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச சபையினால் உலக புத்தக தினத்தை முன்னிட்டு நடாத்தும் நூலகக்கண்காட்சி இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு காரைநகர் பிரதேசசபை பொதுநூலகத்தில் (வடக்கு) காரைநகர் பிரதேசசபை செயலாளர் இரா.லோகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம், காரைநகர் இலங்கை வங்கி முகாமையாளர் ப.பகீரதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-6)


ஆனந்தி திருமண சேவை

மணமகன் தேவை

ஆயிலிய நட்சத்திரம், கிரகபாவ சங்கியை 42; ஏழிற் செவ்வாய், 16.03.1973இல் பிறந்த கணினி விஞ்ஞானத்துறையில் பட்டம் பெற்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் பெண்மணிக்கு உள்ளூர் அல்லது வெளியூர் மணமகனைத் தேடுகின்றோம். அஞ்சல் மூலம் அல்லது (நேரடியாக, 0212228708 தொலைபேசியிலும் |கொழும்புக்கு எனின் 0776047195இல்| V.A சிவராசா சோதிடர் 56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பினை மேற்கொள்ளலாம். (1126)

## இன்று ஒரு தகவல்

# உயர்ந்த பண்பு

ஒரு போர் நடந்து கொண்டிருந்த சமயம், பிரெஞ்சுத் துருப்புகள் ஜெர்மனியில் முகாம் இட்டிருந்தார்கள். அவர்களது படையில் நிறைய குதிரைகள் இருந்தன. அவற்றிற்கெல்லாம் ஆகாரம் தேவைப்பட்டது. படைத்தலைவர் ஒரு படைப்பிரிவின் அதிகாரியைக் கூப்பிட்டு குதிரைகளுக்குத் தேவையான புல்லைக் கொண்டு வரும்படி உத்தரவிட்டார்.

உடனே அந்தப்படை அதிகாரி கூட இருந்த படை வீரர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட இடத்துக்குப் போனார். அங்கே மரங்கள் மட்டும் தான் இருந்தன. அந்தப்பகுதி ஒரு சிறிய பள்ளத்தாக்கு! சுற்றிலும் குன்றுகள். சிறிது தூரத்தில் ஒரு குடிசை தெரிந்தது. அந்த அதிகாரி தன்னுடைய படைவீரர்களில் ஒருவனை அந்தக் குடிசையின் கதவைத் தட்டச் சொன்னார் குடிசையின் கதவு திறந்தது.

அக்குடிசையிலிருந்து வயதானவர் ஒருவர் வெளியில் வந்தார். அவரிடம் ''பெரியவரே எங்கள் குதிரைகளுக்கு புல் தேவைப் படுகிறது இவ்விடத்தில் எங்கே புல் கிடைக்கும்?'' எனக் கேட்டனர். அவரும் இவர்களை அழைத்துக்கொண்டு காடுமேடெல்லாம் தாண்டி போய்க் கொண்டிருந்தார். வழியிலே ஒரு புல் நிலம் இருந்தது. படைத்தலைவர் அந்த இடத்தைப் பார்த்ததும் ''இந்த இடத்திலேயே புல் அறுக்கலாமே'' என்றார். பெரியவர் இங்கு வேண்டாம் என்று கூறிவிட்டு தொடர்ந்து போய்க் கொண்டே இருந்தார். வழியில் புல் அறுக்கக்கூடிய இடங்கள் இருந்ததும் ஒன்றும் வேண்டாம் என்று சொல்லிவிட்டு, வேறொரு புல் நிலத்துக்கு அழைத்துச் சென்று புல் அறுக்கச் சொன்னார்.

படைத்தலைவருக்கோ ஒரே ஆச்சரியம். இவ்வளவு தூரம் வந்தோமே வரும் வழியிலேயே எவ்வளவோ புல் நிலங்கள் இருந்தனவே, பெரியவர் ஏன்? இங்கு கூட்டி வந்தார் ஏ்ன்று அவரிடமே கேட்டார். அதற்கு அப் பெரியவர் அந்த நிலமெல்லாம் என்னுடையதல்ல இதுதான் என்னுடைய நிலம் என்றாராம். இந்தச் செயலால் அந்த அதிகாரி வியப்படைந்தாராம்.

அடுத்தவன் நிலம்தானே அறுத்துக் கொண்டு போ என்று சொல்பவர்கள் மத்தியில், பெரியவரின் செய்கை ஆச்சரியப்படவைக்கிறதல்லவா.

நம்ம ஆள் ஒருத்தன் இருந்தான். அவன் ஒரு குதிரை வைத்திருந்தான். குதிரையை எந்த நேரமும் வண்டியிலேயே பூட்டி வைத்திருப்பான். தரையில் படுக்கக்கூட விடமாட்டான். இதைப்பார்த்த ஒருவர் உனக்கு ஜீவ காருண்யமே கிடையாதா எப்பார்த்தாலும் குதிரையைப் பூட்டியே வைத்திருக்கிறாயே அவிழ்த்து விடக்கூடாதா? என்று கேட்டார்.

அதற்கு அவன் "குதிரையை அவிழ்த்துவிட்டா பொத்தென்று கீழே விழுந்து விடும். ஒரு ஆதார பலம் வேண்டும் என்பதற்காகத்தான் கட்டிவைத்திருக்கிறேன் என்றான்."

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# மக்களின் இறைமையைப் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ரணில் விக்ரமசிங்க கோரிக்கை

நாட்டு மக்களுக்கான உரிமைகளை வழங்கி அவர்களின் இறை



மையைப் பாதுகாப்பதற்கும் அரசியலமைப்புக்கு அமைய ஜன நாயகத்தைப் பேணுவதற்கும் இலங்கை அரசாங்கம், ஐக்கிய தேசியக்கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் சிவில் சமூகப் பிரதிநிதிகள், சர்வதேச சமூகம் போன்றவற்றுடன் பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இறைமையைப் பாதுகாக்கும் நோக்குடன் அரசாங்கம், எதிர்க்கட்சிகள் மற்றும் சர்வதேச சமூகத்துடன் பொது இணக்கப்பாட்டுக்கு வராவிட்டால் அனைவரும் இணைந்து வன்முறைகள் அற்ற போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமென அவர் தெரிவித்தார்.

''இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் அரசாங்கத்துக்கு எதிராக கடும் தீர்மானங்களை எடுக்கும் மாற்றுத்திட்டமொன்று சர்வதேச சமூகத்துக்கு உள்ளது'' என பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற அமரர் அத்துலத் முதலியின் ஞாபகார்த்த நிகழ்வில் கலந்துகொண்டபோது ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

17ஆவது திருத்த சட்டமூலத்தை அரசாங்கம் குறைத்து மதிப்பிட்டுள்ளது. 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மக்கள் ஆணைவழங்கிய அரசியலமைப்புச் சபையை ஜனாதிபதி தொடர்ந்தும் நியமிக்காமல் இழுத்தடித்து வருகிறார் எனக் குற்றஞ்சாட்டிய எதிர்க்கட்சித் தலைவர் தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளையும் நியாயப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிப்பதாகத்தெரிவித்துள்ளார். (அ-5)

## யோகாசன தியான வகுப்புக்கள்

யாழ்ப்பாணம் சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தினரினால் இருபாலை, கட்டைப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான திருமண மண்டபத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு சிவலிங்கயோகேந்திர செயலாளர் சி.சோதிமூர்த்தி தலைமையில் யோகாசன தியான வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

நிகழ்வில் யாழ்.போதனாவைத்தியசாலை உளவளத் துணையாளர் நா.நவராஜ் அறிமுக உரையை வழங்குவார்.

இப் பயிற்சி நெறியில் வயது வேறுபாடின்றி ஆண், பெண் இருபாலரும் கலந்துகொள்ளலாம் என்று பயிற்சி நெறியை பூரணமாக பூர்த்தி செய்வோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் சிவலிங்க யோக கேந்திரா இயக்குநர் க.நிஜலிங்கம் அறிவித் துள்ளார். (ஓ)

## முதன்முறையாக யுத்தத்துக்கெதிராக தொழிற்சங்கங்களின் மே தினம்

## இடதுசாரி முன்னணி ஏற்பாடு

(கொழும்பு)

யுத்தத்திற்கு எதிராக தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து மேதினத்தை இம்முறை இடதுசாரி முன்னணி நடத்தவுள்ளது.

தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து யுத்தத்தை எதிர்த்து நடத்தப்படும் மேதினம் இலங்கையில் இடம்பெறுவது இதுவே முதற்தடவை யாகும் என்று இடது சாரி முன்னணியின் அமைப் புச் செயலாளர் சமில் ஜெயநெத்தி தெரிவித்தார்.

இது தொடர்பாக சமில் ஜெயநெத்தி மேலும் கூறியதாவது,

பாலா தம்பு தலைமையிலான இலங்கை வர்த்தக ஊழியர்சங்கம், ஐக்கிய தொழிற்சங்க சம்மேளனம், ஷா தலைமையிலான வங்கி ஊழியர்சங்கம்மற்றும்ஐந்துஊடகஅமைப்புக்கள் இணைந்து இம்முறை மேதினத்தை நடத்தவுள் ளனர்.

மே முதலாம் திகதி கொள்ளுப்பிட்டியில் உள்ள இலங்கை வர்த்தக ஊழியர் சங்க முன்றலில் இருந்து நண்பகல் 1 மணிக்கு தொழிற்சங்கங்களின் ஊர்வலம் ஆரம்பமாகி மாலை 3 மணிக்கு ஹைட்பார்க் மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

இக்கூட்டத்தில் இடது சாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன சிறப்புரையாற்று வார். யுத்தத்திற்கு, மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் விலை உயர்வை குறைக் குமாறும் வலி யுறுத்தியுமே இம்முறை மேதினம் நடத்தப்பட வுள்ளது. முதல் முறையாக யுத்தத்திற்கு எதிராக தொழிற் சங்கங்கள் இணைந்து நடத்தும் மே தினக் கூட்டம் இதுவாகும். (அ-5)

## இராசிபலன்

30.04.2008
(சித்திரை 18, புதன்கிழமை)
அவிட்டம் முற்பகல் 08.36 மணிவரை
தசமி பின்னிரவு 03.06 மணி வரை
இராகுகாலம் 11.57-01.27 மணிவரை
சுபநேரம் 04.27-05.57 மணிவரை
திருநாவுக்கரசர் குருபூசை

| | |
|---|---|
| மேடம் | போசனசுகம், காரிய அனுகூலம், பொருள்சேர்க்கை, கலந்துரையாடல். |
| இடபம் | அதிகாரம், முயற்சி கைகூடும், நண்பர்கள் உதவி, உற்சாகம். |
| மிதுனம் | பிதாசிந்தை, கட்டுப்பாடு, புதிய தகவல், அதிகசெலவு. |
| கடகம | அபகீர்த்தி, காரிய தடங்கல், பிரயாணம், உடல்நலக்குறைவு. |
| சிங்கம் | அபூர்வ சந்திப்பு, முயற்சி தாமதம், சுபநிகழ்வு, போசனசுகம். |
| கன்னி | தேகநலன், காரிய அனுகூலம், பணவருவாய், மனமகிழ்ச்சி. |
| துலாம் | புத்திரரால் கவலை, காரிய தாமதம், ஆரோக்கியக்குறைவு. |
| விருச்சிகம் | சுபசெலவு, தேகநலன், பிரயாணசுகம், வேலைச்சுமை. |
| தனுசு | சகோதரர் உதவி, முயற்சி கைகூடும், நல்ல செய்தி, போசனசுகம். |
| மகரம் | மனக்கிலேசம், முயற்சிதாமதம், அபகீர்த்தி, ஆரோக்கியக்குறைவு. |
| கும்பம் | புதிய முயற்சி, போசன நன்மை, நண்பர்கள் சந்திப்பு, தெய்வசிந்தை. |
| மீனம் | காரிய அலைச்சல், சுபசெலவு, ஆரோக்கியக்குறைவு. |

வள்ளுவன்

## மூதறிஞர் கவிஞர் அரியாலையூர் வே.ஐயாத்துரை ஞாபகார்த்த கவிதை நூலுக்கான விருது

யாழ்.இலக்கிய வட்டம் தனது இலக்கிய முயற்சிகளைப் பரவலாக்கி ஊக்குவிக்கும் முகமாக ஈழத்தின் மூத்த கவிஞர் காலஞ்சென்ற அரியாலையூர் வே.ஐயாத்துரையின் ஞாபகார்த்தமாக 2007ஆம் ஆண்டுக்குரிய சிறந்த கவிதை நூலுக்கான விருது வழங்க ஏற்பாடு செய் துள்ளது.

இக் கவிதை நூலுக்கான விருதின் பரிசுத் தொகை ரூபா 10.000/- ஆகும். இத்தொகையினை யாழ். இலக்கிய வட்ட உறுப்பினரும், அவரது மகனுமான ஐ.வரதராஜா வழங்க முன்வந்துள்ளார். யாழ்.இலக்கிய வட்டம் காலஞ்சென்ற கவிஞர் ஐயாத்துரையின் ''வெள்ளைக் கமலம்'', ''வளர்தெங்கு'' ''ஐயாத்துரையன் கவிதைகள்'' என்னும் மூன்று கவிதை நூல்களை வெளியிட்டுள்ளது. இக்கவிஞர் இலங்கை அரசினால் நடாத்தப்பட்ட காந்தி நூற்றாண்டு விழா கவிதைப் போட்டிகளில் முதல் பரிசு பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்விருதிற்கான கவிதை நூல் தெரிவுகள் இலங்கை இலக்கியப் பேரவை விருதின் தேர்வுக்கு அனுப்பப்பட்ட நூல்களிலிருந்து தெரிவு செய்யப்படும் என இலங்கை இலக்கியப்பேரவை செயலாளர் தெரிவித்துள்ளார். (அ)



கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற ஆட்பதிவுத் திணைக்கள உப அலுவலகத் திறப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் உரையாற்றுவதையும் தலைமை தாங்கிய கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஜ், அச்சுவேலி ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் த.கவீந்திரதாஸ் மற்றும் பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

# தமிழக மீனவர்கள் 6பேர் இலங்கை கடற்படையால் கைது

(இராமேஸ்வரம்)

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக குற்றம் சாட்டி இராமேஸ்வரம் மீனவர்கள் 6பேரை இலங்கை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

இராமேஸ்வரம் அருகே உள்ள பாம்பனை சேர்ந்தவர் திபுர்சியான். இவருக்கு சொந்தமான டி.என்.12 டபிள்யு.வி.1256 என்ற பதிவு எண் கொண்ட இயந்திரம்பொருத்திய படகில் அதே பகுதியை சேர்ந்த பாத்தியன், வெள்ளைச்சாமி பிச்சை, சேசு ஆபரணம், செல்வம், அந்தோணி ஆகியோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மீன் பிடிக்க சென்றனர்.

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் , அந்த படகை சுற்றிவளைத்து பிடித்தார்கள். பின்னர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக குற்றம்சாட்டி, 6 மீனவர்களையும் கைதுசெய்த கடற்படையினர் அவர்களை படகுடன் இலங்கைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

பின்னர் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் 6 மீனவர்களும் ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸார் அவர்களை ஊர்காவற்றுறை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தி, யாழ்ப்பாண சிறைச்சாலையில் அடைந்துள்ளனர்.

தமிழக மீனவர்கள் மீதான வழக்கு மீண்டும் 12ஆம் திகதி விசாரணைக்கு வரவுள்ளதாகவும், அப்போது அவர்க்ளை விடுவிக்க சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் நிரபராதி மீனவர் கூட்டமைப்பின் தலைவர் யு.அருளானந்தம் தெரிவித்தார். (அ-5)

# சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தினரால் புன்னாலைக் கட்டுவன் வடக்கு திடப்புலம் நரசிங்க வைரவ ஆலய மஹோற்சவ காலங்களில் சிவலிங்க யோககேந்திரா நிலைய தலைவர் நா.நவராஜ் தலைமையில் நடாத்தப்படும் சிறப்புச் சொற்பொழிவு வரிசையில் இன்று புதன்கிழமை "அன்பு பூசை" எனும் தலைப்பில் சிதரம்பரநாதன் சசீவனும், நாளை வியாழக்கிழமை "ஆசார பூசை" எனும் தலைப்பில் சைவப் புலவர் கந்தசத்தியதாசனும் சொற்பொழிவாற்றவுள்ளனர். (அ-7)

# கனனி வன்பொருள் திருத்தும் பயிற்சிநெறி ஆரம்பவிழா

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் அறவழிப் போராட்டக்குழு நடாத்தும் கனனி வன்பொருள் திருத்தும் பயிற்சி நெறி ஆரம்ப விழா எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12மணியளவில் சாவகச்சேரி அறவழி தொழில் பயிலகத்தில், அறவழிப் போராட்டக்குழுத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் எஸ்.ரி.பி.நிறுவன அதிபர் எஸ்.சிவலிங்கம், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ்.சிவநாதன், சாவகச்சேரி, மக்கள் வங்கி பிரதி முகாமையாளர் திருமதி ஈ.ஜீவகதாஸ், கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவன எஸ்.பி.ஓ. ஏ.எடின் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ)

# வேலணையில் ஆட்பதிவுத் திணைக்கள உப அலுவலகம் திறப்பு விழா

பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் பிரதேச ரீதியாக ஆட்பதிவுத் திணைக்கள உப அலுவலகங்கள் அமைக்கப்படும் திட்டத்தில் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் ஆட்பதிவுத்திணைக்கள உப அலுவலகத் திறப்பு விழா இன்று நண்பகல் 12 மணியளவில் வேலணை உதவி அர சாங்க அதிபர் மு.நந்தகோபால் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் யாழ்.அரச அதிபர் புதிய அலுவலகக் கட்டடத்தைத் திறந்துவைக்கவுள்ளார். (அ)

# புங்குடுதீவில் 'கோப் சிற்றி'

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இன்றுகாலை 11 மணிக்கு "கோப் சிற்றி" திறந்துவைக்கப்படவுள்ளது.

புங்குடுதீவு ப.நோ.கூ.சங்கத்தலைவர் வைத்திய கலாநிதி க.இராஜரத்தினத்தின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் சிறப்பு விருந்தினர்களாக வேலணை உதவி அரசாங்க அதிபர் மு.நந்தகோபால், கூட்டுறவு உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், வேலணை வலயக் கல்விப் பணிப்பாளர் இராதகிருஷ்ணன், வேலணை மத்தியஸ்தர் சபைத் தவிசாளர் எஸ்.கே.சண்முக லிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

# நெடுந்தீவு கூட்டுறவுச் சமாஜத்துக்கு குளிரூட்டப்பட்ட மீன்பிடிப் படகு

## சிறுவர் பாதுகாப்பு, இலங்கை இன்று கையளிப்பு

இன்று புதன்கிழமை 10 மணிக்கு சிறுவர் பாதுகாப்பு - இலங்கை நிறுவனத்தின் அனுசரணையுடன் நெடுந்தீவு மக்களின் மீன்பிடித் தேவைக்கென சுமார் 6.35 மில்லியன் ரூபாய் பெறுமதியான 40 அடி நீளம் கொண்ட குளிர் ஊட்டப்பட்ட மீன்பிடிப் படகு ஒன்று நெடுந்தீவு கூட்டுறவுச் சங்க சமாசத்திற்கு புங்குடுதீவில் உள்ள குறிகட்டுவான் இறங்குதுறையில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷினால் கையளிக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு-இலங்கை




நிறுவனத்தின் யாழ்.மாவட்ட முகாமையாளர் விக்டர் மோசஸ், திட்டப்பணிப்பாளர் க.மகேந்திரன் திட்ட உத்தியோகத்தர் கு.சிவரஞ்சினி, மீனவ சமாசத்தின் பதில் முகாமையாளர் க.தருமலிங்கம் உட்பட நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் மற்றும் மீன்பிடி சமாசங்களைச் சேர்ந்த தலைவர், செயலாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப் படகின் உதவியுடன் நெடுந்தீவுப் பகுதியில் பிடிக்கப்படும் மீன்கள் பழுதடையாமல் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுசென்று விற்பனைசெய்ய முடியும்.

இப்படகு 18 கன மீற்றர் கொள்ளளவும், 2.5 தொன் கொள்ளளவுடையை குளிரூட்டியையும் கொண்டதாக அமைந்துள்ளது. இதன் மூலம் 1500 சிறுவர்களும் 1000 குடும்பங்களும் நன்மை பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நெடுந்தீவு மீனவ சங்கம், வடக்கு கடற்படைத் தலைமையின் அனுமதியைப் பெற்று இப்படகைப் பயன்படுத்தும் யாழ்.அரச அதிபரின் கண்காணிப்பின் கீழ் மீன்பிடி மற்றும் நீரியல்வளத் திணைக்கள யாழ்.மாவட்டக் காரியாலயம் இதன் பாவனைக்கான அறிவுறுத் தல்களை வழங்கும். (ஓ)

# பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் தன்னியக்க பணப்பரிமாற்ற சேவை

நாடளாவிய ரீதியில் கணனிவலைப் பின்னலுடன் இணைக்கப்பட்ட பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி எதிர்வரும்2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தன்னியக்கப் பணப்பரிமாற்ற சேவையை ஆரம்பித்து வங்கி வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்ற உள்ளது.

இவ்வங்கியின் தன்னியக்க பணப்பரிமாற்றச் சேவை ஆரம்பவிழாவுக்கு வங்கி முகாமையாளர் எம் பரமானந்தம் தலைமை தாங்குவார். பருத்தித்துறை சுகாதார சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா ஆசியுரை வழங்குவார்.

பேராசிரியர் என்.நடராஜா சுந்தரம் தன்னியக்கப்பணப்பரிமாற்ற இயந்திரத்தை சம்பிரதாயபூர்வமாக இயக்கி பணப்பரிமாற்றச் சேவையை ஆரம்பித்து வைக்கவுள்ளார் அன்றைய தினம் வாடிக்கையாளர்கள்




தன்னியக்கபணப்பரிமாற்றசேவைக்கான பாவனை அட்டைக்கான விண்ணப்பப் படிவங்களை நிரப்பிச்சமர்ப்பிக்கலாம் என வங்கி முகாமையாளர் பரமானந்தம் தெரிவித்துள்ளார். (ஓ-52)

# மேதினக் கூட்டம்

புதிய ஜனநாயகக் கட்சியின் மேதினக் கூட்டம் புத்தூர் மேற்கு, கலைமதி மக்கள் மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு புதிய ஜனநாயகக்கட்சியின் வடபிரதேச செயலாளர் கா.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் புதிய ஜனநாயகக் கட்சியைச் சார்ந்த பொ.முருகேசு, கா.பஞ்சலிங்கம் மற்றும் தேசிய கலை இலக்கிய பேரவை உறுப்பினர் க.தணிகாசலம் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர். (அ-6)

# மீட்டல் வகுப்புகள்

(குருநகர்)

குருநகர் கார்மேல் மாத இளையோர் அவையினரால் க.பொ.த (சா/த) மாணவர்களுக்கு இலவசமாக மீட்டல் வகுப்புக்களும் பிரத்தியோக வகுப்புக்களும் நடத்தப்படுகிறது.

இவ் வகுப்புக்கள் திங்கள் முதல் வெள்ளி வரை மாலை 4 மணிக்கு தினமும் இடம்பெறுவதாக குருநகர் கார்மேல் மாத இளையோர் அவையினர் தெரிவித்துள்ளனர். (ஓ)

# நாவுக்கரசர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வருடந்தோறும் நடாத்திவரும் திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாதஸ் சுவாமி தேவஸ்தானத்தில் காலைப்பூசையுடன் அப்பர் சுவாமிகளுக்கு அபிஷேகம், ஆரா தனை வழிபாட்டுடன் நடைபெறும்.

மாலை 6-30 மணிக்கு யாழ்ப்பாணம், பலாலி வீதி, இந்து சமய பேரவை ஸ்ரீநடராஜப்பெருமான் திருக்கோயிலில் விசேட பூசை, புராணபடனம், "அப்பர் சுவாமி களின் அருள் தொண்டு" எனும் பொருளில் சொற்பொழிவு, அப்பர் சுவாமிகளின் திருப்பதிகப் பாராயணம் ஆகியன மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்ப நாயகம் தலைமையில் நடைபெறும். (ஓ)

# இறுவெட்டு வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீபால கதிர்காம தேவஸ்தான பால சம்ரட்ஷணா முத்தமிழ் சங்கம் நடாத்தும் முருக பக்திப் பாடல்கள் ஒலி, ஒளி இறுவெட்டு வெளியீட்டு விழா எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையல் நடைபெறவுள்ளது.

விழாவில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். நல்லை ஆதீனம் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

நிகழ்வில் வெளியீட்டுரையை சிவஸ்ரீ கு.குமாரக்குருக்கள் வழங்குவார். முதற் பிரதியை மாசிலாமணி மங்களேஸ்வரன் வெளியீட்டு வைப்பார். நயப்புரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் வழங்குவர். (ஓ)

# மாணவர் கௌரவிப்பு விழா

இலங்கை வங்கி அனுசரணையுடன் இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் நடாத்தும் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர் கௌரவிப்பு விழா இன்ஸ்ரிரியூட் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் மூன்றாம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நிறுவன சிரேஷ்ட ஆசிரியர் ந.மோகநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் பிரதம விருந்தினர்களாக வைத்திய கலாநிதி சி.சிவகோணேசன், வைத்திய கலாநிதி தாரணி சிவகோணேசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இருபாலை கற்பக விநாயகர் ஆலய பிரதமகுரு பா.செல்வசேனக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குவர். (ஓ)





கொமர்ஷல் வங்கியின் அருணலு சிறுவர் சேமிப்பு திட்டத்தின் கீழ் 2007இல் நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு நன்கொடை சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் சுன்னாகம் கிளையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை ரீதியில் முதல் பரிசை பெற்ற இணுவில் இந்துக்கல்லூரி மாணவன் சி.பிரதீஸ்வரன்; மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய மாணவன் தே.லுஹீரதன் ஆகியோருக்கு வங்கி முகாமையாளர் இ.குலேந்திரன் சான்றிதழ் வழங்குவதை முதல் இரு படங்களிலும், பாடசாலை ரீதியாக முதல் மூன்று இடங்களில் சித்தியடைந்த மாணவர்கள் சி.பிரதீஸ்வரன், யோ.ரவிதர்ஷன், தே.லுஹீதரன், ம.தரன்யா, க.தனுஷிகா. மோ.சாரினி, த.ஜனித்தா மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் டிகேந்திரன், விவேகானந்தன், குலேந்திரன் (முகாமையாளர்) மதியுகன் ஆகியோரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# தோனி அணிக்கு நான்காவது வெற்றி; பெங்களூர் அணியின் வாய்ப்பு நழுவியது

(பெங்களூர்)

தோனியின் அதிரடியும் ஹோனியின் சிறப்பான பந்து வீச்சினாலும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 13 ஓட்டங்களால் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸை வீழ்த்தியது.

இந்திய கிரிக்கெற் சபையால் ஆரம்பிக்கப்பட்ட இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது–20 தொ·ர் நடைபெற்று வருகிறது. இதில் சர்வதேச பிரபல வீரர்கள், உள்ளூர் வீரர்களைக் கொண்ட 8 அணிகள் மோதுகின்றன.

இத்தொடரில் நேற்று முன்தினம் பெங்களூரில் நடைபெற்ற லீக் சுற்றின் 15ஆவது போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் டிராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் மோதின.



இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் தோனியின் அதிரடியான துடுப்பாட்டத்தினால் 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெற்றுக்களையிழந்து 178 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் தோனி 30 பந்துகளில் (9 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 65 ஓட்டங்களையும் மக்கல் ஹஸி 37 பந்துகளில் 47 ஓட்டங்களையும் மற்றும் றெய்னா 28 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஜாகீர்ஹான் 3 விக்கெற்றுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு 20 ஓவர்களில் 179 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி ஜாபர், றெய்லர் சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்திய போதும் நடுத்தர வரிசைத் துடுப்பாட்ட வீரர்களின் சொதப்பலான ஆட்டத்தினால் 19.4 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையுமிழந்து 165 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 13 ஓட்டங்களால் போராடித் தோல்வியுற்றது.

இதில் ஜாபர் 33 பந்துகளில் (5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 50 ஓட்டங்களையும் றெய்லர் 34 பந்துகளில் (3 பவுண்டரிகள்,3 சிக்சர் உட்பட) 53 ஓட்டங்களையும் எடுத்தனர். அணித்தலைவர் டிராவிட் ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் ஹோனி 3 விக்கெற்றுக்களையும் அமர்நாத், ஜோகிந்தர் சர்மா ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இத்தொடரில் தான் ஆடிய 4 போட்டிகளிலும் வெற்றிபெற்று வீழ்த்த முடியாத அணியாக வலம் வருகிறது.

இறுதிவரை பதற்றப்படாமல் அணியை கம்பீரமாக வழிநடத்திய அணித்தலைவர் தோனி ஆட்டநாயகன் விருதைப்பெற்றார்.

இதேவேளை இப்போட்டியில் தோல்வியடைந்த டிராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 4 ஆட்டங்களில் 2இல் தோல்வியடைந்துள்ளது.

3ஆவது தோல்வியைச் சந்தித்தது.

(5)

# ஹர்பஜன் தாக்கியதை ஒப்புக் கொண்டார்

ஹர்பஜன் சிங் கன்னத்தில் அறைந்ததை சிறிசாந் ஒப்புக் கொண்டுள்ளார். மலையாள தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியிலேயே சிறிசாந், ஹர்பஜன் தாக்கியதை ஒப்புக்கொண்டுள்ளார். இந்தப் பேட்டியில் அவர் கூறியதாவது,

வெற்றி பெற்றதும் ஹர்பஜன் சிங்கிடம் கை கொடுக்கச் சென்றேன்.அப்போது இந்த முறையும் அதிர்ஷ்டம் இல்லை.அடுத்த முறையாவது அதிர்ஷ்டம் கிடைக்கட்டும் என்று அவரிடம் கூறினேன். அப்போது அவர் கோபத்துடன் என்னைத் தாக்கினார். எனது கன்னத்தில் குத்தினார். இதில் நிலை தடுமாறிவிட்டேன்.

அவரிடம் இருந்து இப்படி ஒரு தாக்குதல் வரும் என எதிர்பார்க்கவில்லை. இது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளித்தது. நான் இந்தச் சம்பவத்தை மறந்து விட்டேன். ஹர்பஜன் சிங் எனது மூத்த சகோதரர். அவரை நான் மன்னித்து விட்டேன். எங்களுக்குள் எந்தப் பிரச்சினையும் இல்லை. இவ்வாறு சிறிசாந் குறிப்பிட்டார்.

முன்னதாக அளித்த பேட்டியொன்றில் சிறிசாந் ஹர்பஜன் சிங் தன்னை தாக்கவில்லை என்றும் கை கொடுக்கையில் வழக்கத்துக்கு மாறாக நடந்து கொண்டதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# சிறிசாந்தை தாக்கிய விவகாரம்

# தடை விதிக்கப்பட்ட ஹர்பஜனுக்கு 3 கோடி ரூபாய் வருமான இழப்பு

(புதுடில்லி)

சிறிசாந்தை தாக்கிய சுழல்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்குக்கு 11 ஐ.பி.எல் போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டது. இதனால் ஹர்பஜனுக்கு 3 கோடி ரூபாய் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் மொகாலியில் நடந்த ஐ.பி.எல்.கிரிக்கெட் போட்டியின் போது கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி வீரர் சிறிசாந்தை, மும்மை இந்தியன்ஸ் அணி வீரரும் பிரபல இந்திய சுழல்பந்து வீச்சாளருமான ஹர்பஜன் சிங் கன்னத்தில் தாக்கினார்.

இந்த சம்பவம் தொடர்பாக ஐ.பி.எல் விசாரணை நடத்த உத்தரவிட்டது.

இதனைத் தொடர்ந்து நடுவர் பரூக் என்ஜினீயர் அதிகாரியாக இருந்து விசாரணை நடத்துவார் என்று அறிவிக்கப்பட்டது.



டெல்லியில் நேற்று முன்தினம் நடுவர் பரூக் என்ஜினீயர் தீவிர விசாரணை நடத்தினார்.

விசாரணையின்போது பஞ்சாப் அணி சார்பில் சிறிசாந், மும்மை அணி சார்பில் ஹர்பஜன் சிங், பயிற்சியாளர் லால்சந்த் ராஜ்புட் ஆகியோர் விசாரணை அதிகாரி முன்பாக ஆஜரானார்கள்.

முதலில் சாட்சிகள் விசாரணை நடத்தப்பட்டது. பின்னர் தாக்குதல் சம்பவம் தொடர்பாக வீடியோ ஆதாரங்களும் சமர்ப்பிக்கப்பட்டன. அதையும் பரூக் என்ஜினீயர் விரிவாக ஆராய்ந்தார். இந்த விசாரணை இரண்டு மணிநேரம் நீடித்தது.

விசாரணையின்போது சிறிசாந்தை தாக்கியதை ஹர்பஜன் சிங் ஒப்புக் கொண்டார்.

மேலும் தான் நடத்து கொண்ட விதம் குறித்து வருத்தம் தெரிவித்ததோடு அதற்காக மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். இருந்தபோதிலும் குற்றத்தின் கடுமை கருதி ஐ.சி.சி விதி 4.2 -படி விசாரணை அதிகாரி பரூக் இன்ஜினீயர், ஹர்பஜன் சிங்குக்கு 11 ஐ.பி.எல் போட்டிகளில் விளையாட தடைவிதித்தார்.

மேலும் மூன்றாவது ஐ.பி.எல் போட்டியிலிருந்து 100 சதவீத கட்டணமும் அவருக்கு அபராதமாக விதிக்கப்பட்டது.

எனவே எனி நடக்கும் தொடர்ச்சியான எந்தவொரு 11 ஐ.பி.எல் போட்டிகளிலும் ஹர்பஜன் சிங்கினால் பங்கேற்க இயலாது தவிர அவரால் போட்டித் தொகைக்கான கட்டணத்தையும் பெறமுடியாது.

இதனால் ஒட்டுமொத்தமாக ஹர்பஜன் சிங்குக்கு 3 கோடி ரூபாய் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

### எச்சரிக்கை


சிறிசாந்தை, ஹர்பஜன் சிங் தாக்கிய போது அதைத் தடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்த மும்மை இந்தியன் அணி பயிற்சியாளர் லால்சந்த் ராஜ்புட்டுக்கு 50 சதவீத போட்டிக் கட்டண அபராதமும் விதித்து விசாரணை அதிகாரி அறிவித்தார்.

அதே சமயம் கோபத்தை தூண்டி விடும் விதமாக நடந்துகொண்ட சிறிசாந்துக்கும் விசாரணை அதிகாரி எச்சரிக்கை விடுத்தார். இதுபோல் எனி நடந்து கொண்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

விசாரணை முடிபுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் ஹர்பஜன் சிங்கும் சிறிசாந்தும் சிரித்தவாறு கை குலுக்கிக் கொண்டனர். நடத்ததை மறந்துவிடுவோம் என்றும் அவர்கள் இருவரும் தெரிவித்தனர். (5)

# பகிரங்க மன்னிப்புக் கேட்டார் பாகிஸ்தான் வீரர் அக்தர்

(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் நியமிக்கப்பட்ட தீர்ப்பாயத்திடம் சொயிப் அக்தர் பகிரங்க மன்னிப்பு கேட்டுள்ளார்.

சகவீரரை தாக்கியதற்காக சர்ச்சைக்குரிய பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சொயிப் அக்தருக்கு சர்வதேச கிரிக்கெட்டில் விளையாட 5 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதை எதிர்த்து அவர் மனுத்தாக்கல் செய்தார். அக்தரின் மனுவை பாகிஸ்தான் கிரிக்கெட்சபை தீர்ப்பாயம் விசாரித்து வருகிறது.

இந்நிலையில் இத்தீர்ப்பாயத்தின் முன் ஆஜரான சொயிப் அக்தர் தனது செயல்களுக்கு பகிரங்க மன்னிப்பு கேட்டுக் கொண்டுள்ளார். அக்தரின் மன்னிப்பு உரிய விதத்தில் பரிசீலிக்கப்படும் என தீர்ப்பாயம் அறிவித்துள்ளது. (5)

# றொனால்டோவுக்கு விருது

(லண்டன்)



லண்டனில் நடைபெற்ற தொழில்சார் கால்பந்து வீரர்கள் கூட்டமைப்பின் (பி.எவ்.ஏ) இந்த ஆண்டுக்கான சிறந்த கால்பந்து வீரராக கிறிஸ்டியானோ றொனால்டோ தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து கால்பந்து லீக் அணியான மான்செஸ்டர் யுனைடட் அணிக்கு விளையாடி வரும் கிறிஸ்டியானோ றொனால்டோ போர்த்துக்கல் அணியின் முன்னணி வீரர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பார்சிலோனோ அணிக்கு எதிரான சம்பியன்ஸ் லீக் 2-வது அரையிறுதிப் போட்டிக்கு றொனால்டோ தீவிர பயிற்சியில் ஈடுபட்டிருந்ததால் விருது வழங்கும் நிகழ்ச்சியில் அவர் பங்கேற்கவில்லை.

அவருக்கு பதிலாக மான்செஸ்டர் யுனைடட் முகாமையாளர் அலெக்ஸ் பெர்கூசனிடம் இந்த விருது கையளிக்கப்பட்டது. இதன் மூலம் றொனால்டோ சிறந்த தொழில்சார் கால்பந்து வீரருக்கான விருதை தொடர்ந்து 2-வது முறையாகவும் கைப்பற்றிக் கொண்டார்.

23 வயதான றொனால்டோ இந்த பருவ காலத்துக்கான இங்கிலாந்து கால்பந்து லீக் போட்டிகளில் 38 கோல்களைப் போட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

(5)

# சென்னை அணியின் அடுத்த போட்டி ஹைடன்,ஹசி,ஓரம் ஆடமாட்டார்கள்

(சென்னை)

ஐ.பி.எல் இருபது -20 கிரிக்கெட் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தான் மோதிய 4 ஆட்டத்திலும் வெற்றி பெற்றது.

முதலாவது ஆட்டத்தில் யுவராஜ் சிங் அணியையும் இரண்டாவது ஆட்டத்தில் டெண்டுல்கர் அணியையும் (மும்பை) மூன்றாவது ஆட்டத்தில் கங்குலி அணியையும் (கொல்கத்தா) நான்காவது ஆட்டத்தில் ராவிட் அணியையும் (பெங்களூர்) தோற்கடித்தன.

சென்னை சுப்பர் கிங்ஸ் 5-வது ஆட்டத்தில் சேவாக்கின் டில்லி டேர்டேவில்ஸை எதிர் கொள்கிறது.

இந்த ஆட்டம் நாளை மறுதினம் இரவு 8 மணிக்கு சேப்பாக்கம் மைதானத்தில் நடக்கிறது. இந்தப்போட்டியில் சென்னை அணியைச்சேர்ந்த ஹைடன், மைக்கல் ஹசி (இருவரும் அவுஸ்திரேலியா), ஜேக்கப் ஓரம் (நியூசிலாந்து) ஆகியோர் ஆடமாட்டார்கள்.

3பேரும் அவர்கள் நாட்டு அணியில் விளையாட வேண்டியிருப்பதால் நாடு திரும்புகிறார்கள்.இந்த 3 பேரும் சென்னை அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தவர்கள்.

இவர்களுக்குப் பதிலாக ஸ்டீபன் பிளமிங், மோர்கல், நிற்னி ஆகியோர் இடம் பெறுவார்கள். இதில் மோர்கல் நேற்று முன்தினம் ஆட்டத்தில் முரளிதரன் இடத்தில் ஆடினார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## ஹர்பஜனுக்கு மேலும் தண்டனை காத்திருக்கிறது

சிறிசாந்தைக் கன்னத்தில் அறைந்த விவகாரத்தில் ஹர்பஜன் சிங்குக்கு ஐ.பி.எல் எஞ்சிய போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டது. இதனால் அவருக்கு ரூபாய் 3 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டது. இந்த தண்டனை குறித்து ஹர்பஜன் சிங் கூறும்போது நான் செய்தது மிகப் பெரிய தவறு. எனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன் என்றார்.

கிரிக்கெட் வாரியத்தின் விசாரணைக் குழுத் தலைவர் அவரிடம் விசாரணை நடத்தி 15 தினங்களில் அறிக்கை தாக்கல் செய்வார். அந்த அறிக்கையின் அடிப்படையில் ஹர்பஜனுக்கு மேலும் தண்டனை காத்திருக்கிறது. (5)

# யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் தகவல் சாதனங்களின் கண்காட்சி

**சர்வதேச புத்தக தினத்தை முன்னிட்டு யாழ் பொது நூலகத்தினால் ஒழுங் கமைக்கப்பட்ட 'தகவல் சாதனங்களின் கண்காட்சி' 23.04.2008 ஆம் திகதி காலை 12 மணிக்கு யாழ் மாநகர ஆணை யாளர் மு.செ.சரவணபவவால் வைபவரீதியாக திறந்து வைக்கப் பட்டது. இக் கண்காட்சியின் இறுதி நாள் இன்றாகும்.**

ஒரு சமூகத்தின் அறிவுச் செயற்பாட்டில் இன்றியமையாத பங்கு வகிப்பவை நூலகங்களாகும். தகவல் யுகமான இன்றைய காலத்தில் தகவல் விஞ்ஞானம் பாரிய வளர்ச்சி கண்டுள்ளது தெள்ளத் தெளிவு. தகவல் தொழில் நுட்பம் துரித வளர்ச்சியடைந்து வரும் இன்றைய காலத்தை 'தகவல் யுகம்', 'இலத்திரனியல் யுகம்' என அழைக்கின்றனர். இலத்திரனியல் தொழில் நுட்ப வளர்ச்சியே இதற்குக் காரணம். இக் கண்காட்சியை நோக்கும் போது ஆதி காலத்தில் 'களிமண்ணில் தொடங்கி தற் காலத்தில் கணனிவரை' என்ற கருத்தே பிரதி பலிக்கப்படுவதாக அவதானிக்க முடிகின்றது. இக் கண்காட்சி களிமண் பதிவு பிரதிமுதல் நவீன தகவல் சாதனைகளைக் காட்சிப்படுத்தி உள்ளது.

இன்றைய தகவல் யுகத்தின் தேவையை ஓரளவேனும் பூர்த்தி செய்யக்கூடியதாக அமைந்துள்ளதை கண்கூடாக அவதானிக்க முடிகின்றது. தற்போதைய தகவல் வெடிப்பு Information Explore காரணமாக பல்கிப் பெருகிவரும் நூல்கள் ஆயிரமாயிரமாகும். அனைத்தையும் ஒரு நூலகம் கொள்வனவு செய்வது என்பது நிதி, இடவசதி என்பவற்றைப் பொறுத்து இயலாத காரியமாகும். இதற்கு தற்கால நவீன தகவல் சாதனங்களில் கணனி CD Rom, நுண் வடிவங்கள் Micro forms போன்றவை உதவுகின்றன என்பதை இக் கண்காட்சி புலப்படுத்துகின்றது. இக் கண் காட்சியில் நூல்கள் மட்டுமே காட்சிப்படுத் தப்படாது அனைத்து வகை தகவல் வளங் களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இங்குள்ள நூல்களினை நோக்கும் போது உடனடி உசாத் துணைப் பகுதியை Ready Reference Section சேர்ந்த நூல்களைக் காணக் கூடியதாக உள்ளது.

தனித்துவமான தகவலைப்பெறும் நோக்குடன் காலத்துக்கு காலம் குறிப்பெடுக்க வென வடிவமைக்கப்படும் நூல்கள் இவற்றுள் அடங்கும். இவை சாதாரண நூல்கள் போன்று தொடர்ச்சியாக வாசிக்கக் கூடிய நூல்கள் அல்ல. இவற்றில் உள்ள தகவல்கள் சரியாகவும் முறையாகவும் ஒழுங்குபடுத்தப்பட்

## ஒரு மதிப்பீடு

டிருப்பதன் காரணமாக தேவைப்படும் தகவல்கள் உடனுக்குடன் கால விரயமின்றி பெற்றுக் கொள்ள முடியும். நூலக மொன்றின் தரத்தை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு வகிப்பது உடனடி உசாத் துணைப் பகுதியாகும். இதன் படி யாழ் .பொது நூலகம் இங்கு அமைந்துள்ள சமூகத்தின் தகுதியைப் பிரதிபலிக்கின்றது தெளிவாகின்றது. இவற்றுள் தகவல் சாதனங்களான கலைக் களஞ்சியங்கள் Encyclopaedias அகராதிகள் Dictionaries, ஆண்டுநூல்கள் year Books வழி காட்டிகள் Directories ,வாழ்க்கை வரலாற்று நூல்கள் Biographical Sources புவியியல் சாதனங்கள் GeographicalSources வழிகாட்டி நூல்கள், Guide Books தேசப் படங்கள் Maps போன்றன காணப்படுகின்றன. இந் நூல்கள் எவற்றைக் குறிப்பிடுகின்றது என்பது பற்றி சிறுசிறு விளக்கக்குறிப்புகளுடன் நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம்ஒரு தகவலைத் தேடும் வாசகர் அவற்றை எங்கு இலகுவில் பெறலாம் என்பதை இக் கண்காட்சி புலப்படுத்துகின்றது.

பருவ வெளியீடுகளை நோக்கும் போது ஒழுங்கான கால இடைவெளிகளை சீரான வடிவத்தில் நிலையான தலைப்புடன் பகுதிகளாகவோ தொடராகவோ வெளியிடப்படும் எந்த ஒருவெளியீடும்பருவவெளியீடுகள்எனப் படும். செய்தித் தாள்கள், பருவ இதழ்கள், வருடாந்தவெளியீடுகள், தொடர்நூல்கள், நிறுவன வெளியீடுகள் என்பன இதில் உள்ளடக்கப்படுகின்றது. இப் பருவ இதழ்களும் உசாத் துணை நோக்கினைக் கொண்டது. மிகப்பெறுமதி வாய்ந்த வளமாக இப்பகுதி கருதப்படுகின்றது. சிறப்பு மலர்கள், தொடர் ,பருவ இதழ்கள் செய்திக்கடிதங்கள்,அரசாங்க ஆவணப் பகுதி அறிக்கைகள், ஆய்வுக் கட்டுரைகள் சிறு நூல்கள் போன்றவை சிறுசிறு குறிப்புகளுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. வாசகருக்கு சிறந்ததையே வழங்குகின்றோம் எனச் சுட்டுகின்றது. நவீன தகவல் யுகத்தின் வெடிப்புக் காரணமாக பல்கிப் பெருகிவரும் தகவல்களைப் பிரதிபலிக்கக் கூடியதாக நூலுருவற்ற சாதனங்களையும் கண்டு கொள்ள முடிகின்றது. இச் சாதனங்களினுள் மரபு ரீதியான சாதனங்களாக ஓவியங்கள், ஓலைச் சுவடிகள் முதல் கொண்டு இன்றைய நவீன கணனிப் பதிவு வரை உள்ளடக்கி இருப்பது இக் கண்காட்சியின் மற்றொரு சிறப்பம்சமாகும். நூல் உருவற்ற சாதனங்கள் அதிகம் பொது நூலகங்களிலேயே காணப்பட வேண்டும்என்ற எதிர்பார்ப்பினை யாழ்.பொது நூலகம் பூர்த்தி செய்கின்றது. இங்கு ஓலைச் சுவடிகள், தாள்கள் கண்டுபிடிப்புக்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட எழுது சாதனங்களுள் முக்கியமானவை. கலைப்பாரம் பரியத்தின் எடுத்துக்காட்டுகளாக விளங்கும் ஓவியங்கள் மிகச் சிறந்த தகவல் சாதனங்களில் ஒன்றாகும். தற்கால தகவல் யுகத்திற்குரிய நுண் சுருள் வாசிப்புக் கருவி பட எறிகருவி, 'மல்ரிமீடியா' என்பன காட்சிப் படுத் தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவற்றின் மூலம் மரபு ரீதியான பிரதியாக்க முறைகளில் மிகமுக்கியமாகக் கருதப்படுவது நுண்வடிவங்களாகும். நுண்வடிவங்கள் பெருமளவில் செய்தித்தாள்களையே கொண்டுள்ளது. செய்தித்தாள்கள் நீண்ட காலப் பாவ னைக்கு ஏற்றதல்ல. எனவே ஆரம்பத்தில் நிரந்தரப் பாதுகாப்புசேமிப்பு கருதி நுண்வடிவங்களில் பெறப்பட்டன. தற்போது 'ஸ்கானர்' இன் வருகையின் பின் இதன் மூலம் நீண்ட காலப் பாவனைக்கு ஏற்றவாறு ஒழுங்குபடுத்தப்படு கின்றது. நூலகங்களில் அதிகம் பயன்படுத்தப்படுவது நுண்படங்களும் நுண்சுருள்களு மாகும்.

மல்ரிமீடியா மூலம் நூல்களின் படிப்படியான வளர்ச்சி மூலமாக திரையில் காண்பிக் கப்படுகின்றது சிறப்பம்சமாகும். தற்கால தகவல் யுகம் பற்றிய பயன்பாடு இங்கு காணக் கூடியதாகவுள்ளது. கடந்த வருடம் யாழ். மாவட்ட நூலகர்களுக்கு இடம்பெற்ற கருத்த ரங்கில் பொது நூலக கேட்போர் கூடத்தில் ஏற் கனவே காட்சிப்படுத்தப்பட்ட சாதனங்களில் முன் னேற்றமானதாகLight Project போன்றவற்றை உள்ளடக்கி தற்போது நவீன தகவல் சாதனங்களை உள்ளடக்கியதாக இக் கண் காட்சி அமைந்துள்ளது. இக்கண்காட்சியில் தகவல் சாதன ஒழுங்கமைப்பில் யாழ். பல் கலைக் கழக முதுநிலை உதவி நூலகரும் நூலக விழிப்புணர்வு நிறுவகத் தலைவருமான செல்வி கா. அருளானந்தம் அவர்களது முழு ஒத் துழைப்பிலேயே இக் கண் காட்சி ஏற்பாடு செய் யப்பட்டமை குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். இக் கண்காட்சியில் காரண கர்த்தா இவ ராவார். இக்கண்காட்சியினை சமூகத்தில் உள்ள அனைவரும் பார்வையிட்டு நவீன தகவல் யுகத்திலேயே தகவல்கள் பெறும் வழிகளை இலகுவில் பெறவேண்டும் என்பதே பொது நூலகத்தின் நோக்கமாகும். *

**திருமதி பொற்செல்வி ஸ்ரீரஞ்சன்**
பொது நூலகம், யாழ்ப்பாணம்.

# அரிசி சாப்பிடுவதை குறையுங்கள் தாய்லாந்து பிரதமர் அறிவுரை

(பாங்கொக்)

அரிசி உணவு சாப்பிடுவதை குறைத்துக் கொள்ளவேண்டும்என்று தாய்லாந்து மக்களை அந்நாட்டு புதிய பிரதமர் சமக் சுந்தர வெஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

தாய்லாந்து விவசாயிகள் உற்பத்தி செய்யும் அரிசிக்கு பல நாடுகளில் அதிக வரவேற்பு உள்ளது. இதனால் அரிசி ஏற்றமதியில் அதிக அந்நியச் செலவாணியை ஈட்டியது அந்த நாடு. கடந்தாண்டு வெளிநாடுகளுக்கு விற்கப்படும் அரிசிவிலையை இரண்டு மடங்கு உயர்த்தியும் ஏற்றுமதி அளவு குறைய வில்லை.

1960இல் இருந்து உலகில் அதிக அரிசி ஏற்றுமதிசெய்யும்நாடுகளில் முதலிடத்தில் உள்ளது தாய்லாந்து. இதை அடுத்து அரிசி ஏற்றுமதியில் இரண்டாவது இடத்தை வியட் நாம் பிடித்துள்ளது. மூன்றாவது இடத்தில் உள் ளது இந்தியா. ஆனால் அந்த நாடுகள் ஏற்றுமதிக்கு தடை விதித்ததை அடுத்து தாய்லாந்து அரிசிக்கு அதிக கிராக்கி ஏற்பட்டது. ஏற்றுமதி செய்யப்படும் அரிசி விலையை இரண்டு மடங் காக உயர்த்தி விற்று வருகிறது தாய்லாந்து. இருந்தும் ஏற்றுமதி தேவையை பூர்த்தி செய்ய முடியவில்லை. இதனால் தான் அரிசி உணவை குறைத்துக் கொள்ளும்படி நாட்டு மக்களுக்கு பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தாய்லாந்தில் அதிகமான விவசாயிகள் உள்ளனர். அவர்களில் பெரும் பாலோர் ஏழைகள் . வசிக்க சரியான வீடில்லை. உற்பத்தி செய்த அரிசியை பாதுகாக்க கிடங்கு வசதி இல்லை. கடன் காரர்கள் தொல்லையும் உண்டு. இப்படி பஞ்சத்தில் அடிபட்ட விவசாயிகளுக்கு இப்போது ஜாக்பொட் அடித்துள்ளது. ஆண்டுக்கு இரண்டு கோடி தொன் அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது. அதில் 90 இலட்சம் தொன் ஏற்றுமதி செய்யப்படுகிறது.



இந்தாண்டு இன்னும் அதிகமாக ஏற்றுமதி செய்தால் ஏழை விவசாயிகளுக்கு அதிக வரு வாய் கிடைக்கும்என்று அரசுகருதுகிறது. அதற்காகத் தான் அரிசி உணவு சாப்பிடுவதை குறைத்துக் கொள்ள பிரதமா கோரியுள்ளார். அவர் இப்படி உணவு விஷயத் தில் மக்களுக்கு வேண்டுகோள் விடுப்பது முதன் முறையல்ல. ஏற்கனவே பன்றி இறைச்சி விலை அதிகரித்த போதும் அதை தடுக்க கோழிக்கறி சாப்பிடும் படி வேண்டுகோள் விடுத்தார். (அ-5)

# வடகொரியா மீது குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

சிரியா ரகசியமாக அணு உலையை அமைக்க வடகொரியா உதவியதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது. சிரியா அணு ஆயுத தயாரிப்பில் ரகசிய மாக ஈடுபட்டிருப்பதாகவும் வடகொரியா இதற்கு உதவி செய்து வருவதாகவும் அமெரிக்கா குற்றஞ் சாட்டி வருகிறது. இதனை சிரியா மறுத்து வருகிறது.

இதனிடையே சிரியாவின் அணு அயுத திட்டம் குறித்து சிஐஏ அதிகாரிகள் அமெரிக்கா நாடாளுமன்றத்திடம் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்துள்ளனர். (அ-5)

## உலக தரிசனம்

# கலிபோர்னியாவில் காட்டுத் தீ ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அப்புறப்படுத்தப்பட்டனர்

(லொஸ் ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவின் மலைப் பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீ வேகமாக பரவி வருகிறது.



அந்தப் பகுதியில் வசித்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புற ப்படுத்தப்பட்டனர்.

அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியாவில் உள்ள மலைப் பகுதியில் திடீரென காட்டுத்தீ ஏற்பட்டது. இந்த தீ வேகமாக பரவி வருகிறது. அந்த பகுதியில் வசித்து வந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப் படுத்தப்பட்டனர்.

தொடர்ந்து தீ பரவி வருவதால் அந்த பகுதியில் வெப்ப நிலை அதிகரித்துள்ளது. மொத்தம் 500க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் மீட்பு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். ஹெலிகாப்டர்கள்மூலமும்தீயை அணைக்கும்முயற்சி நடந்து வருகிறது. காற்றின் வேகம் குறைவாக உள்ளதால் மீட்பு பணிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஏழு நாட்களுக்குள் தீ முழுமையாக அணைக்கப்பட்டு விடும் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-5)

# உயிரி எரிபொருள் கொள்கையே உணவு நெருக்கடிக்குக் காரணம்

## காஸ்ட்ரோ எச்சரிக்கை

(ஹவானா)

உலகில் உணவு நெருக்கடி ஏற்படும் என ஓராண்டுக்கு முன்னரே எச்சரித்ததாக கியூபாவின் முன்னாள் அதிபர் பிடல் காஸ்ட்ரோ கூறியுள்ளார்.

பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் அதிபர் பதவியிலிருந்து சமீபத்தில் ஓய்வெடுத்துக் கொண்டார்.

வயோதிபம் காரணமாக அவர் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதில்லை. எனினும் கியூபா நாளிதழில் அவர் அடிக்கடி கட்டுரை எழுதி வருகிறார்.

சமீபத்தில் அவர் எழுதிய கட்டுரையில் உணவு நெருக்கடி குறித்து ஓராண்டுக்கு முன்னரே தான் எச்சரித்ததாக குறிப்பிட்டுள்ளார்.



அமெரிக்காவின் உயிரி எரிபொருள் கொள்கையே இந்த உணவு நெருக்கடிக்கு முக்கிய காரணம் என்று தான் குறிப்பிட்டிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார். (அ-5)

# என் தந்தை, பாவேந்தர் பாரதிதாசன்

மன்னர் மன்னன்

அப்பா வெறுங் கற்பனைகளை மட்டும் வைத்து கவிதை எழுதவில்லை. வாழ்க்கை அனுபவங்களையே கவிதையாக்கினார். அவரது வாழ்வில் நடந்த பலசம்பவங்களே கவிதை போன்று இனிமையானவை. சுவைசுவட்டுபவை.

ஒருநாள் எங்களுக்குப் பள்ளிவிடுமுறை அப்பா அம்மாவை அழைக்கிறார். 'இன்று பசங்களுக்கு பள்ளி விடுமுறை. வீட்டில் கிடக்குதுங்க. தின்றதுக்கு ஏதாவது செய்து கொடுக்கப் படாது ...? முறுக்கு சுடேன்' என்கிறார்.

சிறிதுநேரத்தில் வீட்டுக்குள்ளே முறுக்கு பிழியப்படும் அடையாளமாக 'சொய்ங்' சத்தம் கேட்கிறது. சாய்வு நாற்காலியிலிருந்து அப்பா மெல்ல எழுந்து எங்களையும் அழைத்துக் கொண்டு உள்ளே செல்கிறார் . தட்டில் எங்களுக்கு சுடச்சுட முறுக்கு அன்புடன் பரிமாறுகிறார். எல்லோரும் முறுக்குகளை தின்று முடிக்கும் நேரம் அம்மா ஒரு சிறிய தட்டில் நாலைந்து முறுக்குகளை எடுத்து வைத்து மூடி உயரே மாடத்தில் வைக்கப்போகிறார். அப்பா கவனித்துவிட்டு 'அது எதுக்கு?' என்கிறார். குரலில் சற்றே கடுமை. ' எடுத்து வைச்சா அப்புறம் உதவுமே...' அம்மா தயக்கமாகக் கூறுகிறார். 'அதான் வேணாங்கறேன் இங்க அதைக் கொடு...' முறுக்குத் தட்டை வாங்கியவர் எங்களிடம் அவற்றை பகிர்ந்தளிக்கிறார்.

ஆசைப்பட்டதைச் செய்து தின்று தீர்த்துடணும் எதுக்கு எடுத்துவைக்கணும்? அப்புறம் நீ அதை எடுத்துக்கொடுக்கும் போது யார் கிடைக்கிறாங்களோ அவங்களுக்கு கொடுப்பேன்... மற்ற குழந்தைகள் ஏமாறணும். அது ரொம்பத் தப்பு' என்றார்.

இந்த உணர்வு அப்பாவுக்கு எப்படி வந்தது? அப்பா சிறுவயதாக இருந்தபோது அவரது அம்மா (என் பாட்டி) தின்பண்டத்தை எடுத்து ஒழித்து வைத்தது பிறகு அதை தனது மூத்த பிள்ளைக்கு கொடுக்க நினைத்தது சிறுவனாகிய சுப்புரத்தினத்துக்கு அது வெறுப்பை ஏற்படுத்திவிட்டிருந்தது. அதனால் தான் அந்த அனுபவம் தன் வாழ்வில் தொடராமல் பார்த்துக் கொண்டார்.

அப்பாவுக்கு பொய் சொன்னாலோ, அல்லது ஏமாற்ற முயன்றாலோ கடுமையாக கோபம் வரும். ஒருமுறை நானும் அவரும் பாசஞ்சர் ரெயிலில் காலையில் சென்னையில் கிளம்பினோம் .ரெயில் விழுப்புரம் வந்தபோது, மணி மதியம் இரண்டரை.

எங்களுக்கு கடுமையான பசி. அங்கிருந்த ஒருகேண்டினுக்குள் நுழைந்தோம். உட்கார்ந்தோம். சர்வர் வந்தார்.

'சூடா என்ன இருக்கு?' அப்பா கேட்டார்.

'ஸ்பெஷல் றவா தோசை சூடா இருக்கு' - சர்வர்.

'ரெண்டு பேருக்கு எடுத்து வா...'

சர்வர் ஆர் டர் எடுத்துக்கொண்டு போய் சிறிது நேரத்தில் தோசையுடன் வந்தார். அப்பா தோசையைத்தொட்டுப் பார்த்துவிட்டு வெடுக்கென்று கையை எடுத்துவிட்டு கோபமானார்.

'இது தான் சூடா?'

சர்வர் அலட்சியமாக ' இந்த நேரத்திற்கு வந்துகேட்டால் இப்படித் தான் கிடைக்கும்'

பசி ஒருபக்கம், பொய்சொல்லி விற்பனை செய்ய நினைக்கும் சர்வர் மறுபக்கம்... அப்பாவுக்கு சினம் தாங்கவில்லை.

எழுந்து நின்று ஆவேசமாகப் பேசினார்.

'டேய்... பகல் கொள்ளை அடிக்கிறீங்களா?' சர்வரும் விடுவதாக இல்லை. 'இஸ்டமிருந்தா தின்னு... இல்லேன்னா போயா...'

நான் அப்பாவின் கையைப்பிடித்து வெளியே அழைத்து வர முயன்றேன். சர்வரோ பில்லைக்கொண்டு வந்து கொடுத்து 'பணம் கொடுத்து விட்டு மறுவேலை பார்....' என்றார். இதற்கிடையில் கல்லாவில் இருந்தவர் தந்தையை அடையாளம் தெரிந்து கொண்டு ஓடி வந்து சமாதானம் செய்தார். அப்போதும் அப்பா



கோபமாகப் பேசினார்.

'ஆறி அவலாய் போய்விட்ட தோசையை சூடாய் இருக்கிறது. ஸ்பெஷல் தோசை என்று சொல்லி ஏமாற்றி விற்க முயன்றால் அந்தக் குற்றத்தை தண்டிக்காமல் விடக் கூடாது...' கல்லாவிலிருந்தவர் அப்பாவின் கையைப் பிடித்து சமாதானப்படுத்தி புதிதாக சுடச்சுட தோசை வார்த்து தரச்சொல்லி அப்பாவின் கோபத்தை தணிவித்தார்.

கடைசியில் சர்வர் அப்பாவின் கையைப் பிடித் துக்கொண்டு ஐயா யாருன்னு தெரியாததால் தப்பு நடந்திடிச்சி...' என்றான். அப்போதும் அப்பா வின் கடுமையான பதில் ; 'யாராக இருந்தாலும் ஏமாற்றி விற்காதே !'

சிறு வயதிலேயே அப்பா சிலம்ப வித்தை நன்கு பயின்றவர். அவர் தீவிரமான தேசபக்தர். நெல்லையில் ஆஷ் துரையை வாஞ்சிநாதன் சுட்டுக் கொல்வதற்கு முன் புதுவைக்கு வந்து தான் துப்பாக்கிபயிற்சி பெற்றார். வாஞ்சிநாதனுக்குத் துப்பாக்கிப் பயிற்சி அளித்தவர் களில் என் தந்தையும் ஒருவர்.

ஒருமுறை வீரர் சாவர்க்கர் எழுதி வெளி நாட்டில் அச்சிடப்பட்ட 'எரிமலை' என்ற ஆங்கில நூல் பிரிட்டிஷ் எல்லைக்குள் வரக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டது. புதுச்சேரி தேசபக்தர் களுக்கு அந்த நூலின் பிரதி ஒன்று ரகசியமாக வந்து சேர்ந்தது.

இதையறிந்து பிரிட்டிஷ் துப்பறியும் பொலிஸார் அந்த நூலைக் கைப்பற்றிவிடத் துடித்தார்கள். இரண்டொரு புல்லுருவிகள் காசுக்கு மயங்கியதால், அந்தப் புத்தகம் கை விட்டுப் போனது. மிகுந்த சிரமத்திற்குப் பிறகு என் தந்தை அந்த நூலைக் கைப்பற்றினார். அதை புதுவையில் இருந்த பாரதியாரிடமும், அர விந்தரிடமும் கொடுக்கச் சென்றபோது பொலி ஸாரால் துரத்தப்பட்டார்.

புதுச்சேரி காமாட்சி அம் மன் கோவிலில் நுழைந்து பிரகாரம் மதிற்சுவர் மேல் ஏறிக்குதித்து உரிய இடத்தில் அந்த நூலை கொண்டுசேர்த்தார். அரவிந்தர் கேட்டாராம். 'இன்னொரு முறைநீ அந்த மதிற்சுவர் மீதிருந்து குதிப்பாயா?' என் தந்தையின் பதில்; 'தேசபக்தக் கடமை உண்டெனில் எதையும் நான் செய்வேன்'

என்றாவது ஒருநாள் அப்பா, அம்மாவிடம் வயிறு என்னமோ செய்கிற மாதிரி இருக்கு என்றார். வீட்டிலிருக்கும் நாங்கள் இதைக் கேட்டு பதறுவோம். அப்பா வயிறு என்னவோ போலிருக்கிறது என்றால் அம்மா கூறும் ஆலோசனை; 'நீங்கள் வேலை செய்யும் பள்ளிக் கூடத்தில் வாத நாராயண மரம் இருக்கு. துளிர் இலையாகப் பறித்துக் கொண்டு வாருங்கள். அடுப்பில் இரவு கொதிக்கவைத்து காலையில் வெறும் வயிற்றில் குடித்தால் வயிற்றுப் பிரச்சினை சரியாகிவிடும்'

அப்பாவும் அம்மாவின் ஆலோசனைப் படி செயல்படுவார். இரவு அம்மா அந்த இலைகளை கொதிக்கவைப்பார். அந்த ரசத்தைக் குடித்தால் சில தடவை பேதியாகும். இரவு நாங்கள் தூங்கப் போகும்போதே கவலையு டன் தான் செல்வோம். அப்பாவை அம்மா காலையில் எழுப்புவார். இரண்டு. மூன்று முறை அப்பா புரண்டு படுத்துவிட்டு ' பழனிம்மா இன்னிக்கு எனக்கு இரண்டு மூன்று வேலை இருக்கு...' என்று கூறிவிடுவார். பிறகு என்ன? அந்த ரசம் எங்களுக்கு வழங்கப்படும். அதன் பிறகு சொல்லவேண்டுமா என்ன? பேதிமருந்து குடிக்க மாட்டேன் என்று குழந்தைகள் அடம்பிடிக்கும். அப்பாவும் அந்த விஷயத்தில் அடம்பிடித்ததால் அவரும் ஒருகுழந்தை தான்!

சய்வு நாற்காலியில் அவர் அமர்ந்து விட்டார். அவரது சாம்ராஜ்யமே தனி. அவரைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதையே மறந்து விடுவார். அவர் சிந்தனைப் பட்டறை வெகு வேகமாக இயங்கும். மலையருவியாய் பொங்கிப் பெருகிவரும். அவரதுகவிதை வேகத்திற்கு அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் வெள்ளைத்தாள் கள் பற்றாக்குறையாகிவிடும். சுற்று முற்றும் பார்ப்பார்.

ஓ தாள் தீர்ந்துவிட்டதென்பதை நாங்கள் உணர்ந்து தாளி ட்டு நிரப்புவோம். பேனாவில் மை தீர்ந்துவிட்டால் நிரப்பித்தர வேண்டும். அவசரத்துக்கு பென்சிலாவது தரவேண்டும். சற்று முன்னெச்சரிக்கையாகவே இவற்றை நாங்கள் தயார் நிலையில் வைத்திருப்போம்.

அதிகாலையில் எழுந்துவிடும் இவர் உடனே எழுத்து வேலையில் ஈடுபட்டுவிடுவார். குளிக்க வேண்டும், சாப்பிட வேண்டும் என்பதை அம்மா பலமுறை நினைவுபடுத்தியும் அவர் பாதியில் நிறுத்தவேமாட்டார். பள்ளிக்குச் செல்லும் நேரம் நெருங்கிவிட்டால் அம்மா சற்று உரத்த குரலில் அழைப்பார். 'நான் இன்னும் சாப்பிடலையா?' என்று திடுக்கிட்டுக் கேட்பார் அப்பா.

'இல்லீங்களே ...' 'இதை முன்னாடியே சொல்லியிருக்கலாமில்லே...' என்பார் அப்பா. அப்பாவியாக அம்மாவுக்கு சிரிப்புத்தாங்காது. 'கண் துஞ்சார், பசிநோக்கார்., கருமமே கண்ணாயினர்' என்று அப்பா விளங்கக் கண்டிருக்கிறோம்.

எதையும் புதிய கண்ணோட்டத் தில் காண்பவர் அவர். அறிவியல் வளர்ச்சியை மனப்பூர்வமாக வரவேற்பார். ஒருநாள் வீட்டுத் திண்ணையில் அவர் உட்கார்ந்திருந்தபோது சைக்கிளை ஓட்டி வந்தவர், தான் திருவெண்ணாமலையைச் சேர்ந்தவர் என்றும், இந்தியா முழுவதும் சைக்கிளிலே சுற்றிவரப் போவதா கவும், வடமாநிலங்கள் இரண்டொன்றில்தான் பயணத்தை முடித்துவிட்டதாகவும் கூறினார். அப்பா ஓர் இறுக்கமான பார்வையை வெளிப் படுத்தினார்.

"ஏன் இந்த கடுமையானமுயற்சி? உன் நோக்கம் என்ன?" என்று கேட்டார் அப்பா. சைக்கிள் காரரால் தீர்மானமாகப் பதில் கூறமுடியவில்லை "ஓர் ஆசைதான்..." என்றார். "பயணம் செய்ய கார், ரயில், பஸ் என்று வாகனங்கள் வந்துவிட்ட நிலையில் உன்முயற்சியை என்னால் ஏற்கமுடியவில்லை. நீ செல்லும் இடங்களில் எல்லாம் அந்த ஊர் செல்வந்தர்களைப் போய்ப் பார்ப்பாய் உதவிகளும் செலவுக்கு பணமும் கேட்பாய். இந்தப் பழக்கம் உன் விசாலப் பார்வைக்கு இடைஞ்சலாகத் தானே இருக்கும். பணம் தருகிறவர்களும் மனம் நொந்து தான் பணம் தருவார்கள். உன் முயற்சியால் நாட்டிற்கு எந்தப் பயனும் இல்லை..." என்றார் அப்பா. சைக்கிள் ஆசாமி நொந்துபோய்த்தான் இருப்பார்.

ஒருநாள் மதுரையிலிருந்து ஓர் இளைஞர் கட்டுக்கட்டாக கவிதைப் பிரதிகளை எடுத்துக் கொண்டு, தந்தையைக் காண வந்தார். அவரைப் பற்றி விசாரித்தவர், 'நீ என்ன செய்துகிட்டிருக்கே? என்று கேட்டார். 'நான் கவிதைப் பணி செய்துகிட்டிருக்கேன்...' என்று அந்த இளைஞர் மிடுக்காகச் சொன்னார்.

நான் கேட்பது, நீ என்ன தொழில் செய்து கொண்டிருக்கிறாய்? எந்த வழியில் வருவாய் தேடிக் கொண்டடிருக்கிறாய்?'

இதைச் சற்றும் எதிர் பார்க்காத அந்த இளைஞர், சமாளித்துக் கொண்டு, 'கவிதை தாங்க எழுதுறேன்' என்றார். இதைக் கேட்டவர், 'நீ உருப்படமாட்டே!' என்றார் கடுமையாக. அந்த இளைஞர் வெலவெலத்துப் போனார். பிறகு, கவிஞர் சற்றுத் தணிவான குரலில் விளக்கினார். 'கவிதை மட்டும் உனக்கு சோறு போடாது. உன் வாழ்க்கைத்தேவைகளுக்குவருவாய் தேடிக் கொள்ள வேண்டியது முதல் கடமை. வருவாய் இல்லாத நிலையில் உனக்கென்று ஒரு கொள்கையை நீ துணிவாகச் சொல்ல முடியாது. அன்றைய சாப்பாட்டுக்குப் பாட வேண்டுமே என்கிற தேவை கருதி உன் சொந்தக் கருத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, யார் யாரைப் பற்றியோ பொய்யாய் புகழ்ந்து பாட வேண்டி வரும். என்னைப் பார் நான் பதினெட்டு வயதிலிருந்து அரசாங்கப் பள்ளியில் ;ஆசிரியராகப் பணியாற்றுகிறேன் எனவே என் குடும்பம் என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. நானும் அவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய தில்லை. குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய் சம்பாதிக்கும விதமாகவெற்றிலைப் பாக்கு கடையாவது நீ வைக்க வேண்டும்.

தொகுப்பு:- ஜெ.கி. ஜெயசீலன்

தந்தையின் இந்த அறிவுரையைக் கேட்ட அந்த மதுரை இளைஞர்த ஊருக்குச் சென்று பெட்டிக்கடை வைத்தார் பிறகு புத்தகக்கடை வைத்தார் தமிழ் அறிஞர்களுக்கெல்லாம் வரவேற்பு நல்கி மதுரையில் நல்ல பெயர் எடுத்தார்; என் தந்தையாரும் மகிழ்ந்து பெருமித மடைந்தார்...'

# சித்தர் சிந்தனையில்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றுக்கு எடுத்துக் காட்டாக குருதி அழுத்த நோயாளிக்கு ஆரம்பிக்கும் முதல் குறிகுணம் தலையிடியாகும். அதுவும் மெல்லியதாகவும் நாட்பட்டதாகவும் காணப்படும்.

இதனை நவீன மருத்துவத்தில் ஒரு நோயாளி தொடர்ந்து தலையிடியுடன் வைத்தியசாலைக்கு வரும் போது அவனது குருதி அழுத்தத்தை அளவிட வேண்டும் என்று வழியுறுத்துகின்றனர் .

இதனை சித்த மருத்துவ நூல்களில் பார்க்கும் போது சமய நோக்குடன் தொடர்பு படுத்தி ஞாயிறு விரதம், சூரிய நமஸ்காரம், சூரிய பொங்கல் , ஆவணி ஞாயிறு ஆகியவற்றையும் கூறி மருந்துகளையும் கூறியுள்ளனர். இதனிலிருந்து சூரியனுக்கும் இதயத்துக்கும் தொடர்பு உண்டு என்பதை தெளிவாகக் காணலாம்.

இவற்றை விட சூரியன் உதிக்கும் போது தலையிடி ஆரம்பித்து மதியத்திற்கு பின் சூரியன் படுக்கையில் தலையிடி குறைந்து வருவதையும் மருத்துவ நூலில் சிரோ நோய்கள் 'சூரியர் வருத்தம் /எழு ஞாயிறு எனக் குறிப்பிடப்பட்டிருப்பதையும் சான்றாகக் கொள்ளலாம். அண்டத்தில் இயங்கும் இச்சக்திகள் அதன் தன் அளவில் இயங்கும் வரை உலகில் ஏதும் துன்பமில்லை. மாறாக அவற்றின் அளவு மாறுபாடு அடையும் போது பூகம்பம், புயல், வரட்சி, பெருமழை ஆகிய துயரங்களைக் கொடுக்கின்றது. இதேபோல் தான் பிண்டமாகிய உடலிலும் இச்சக்திகள் மாறு பாடடையும் போது மாற்றம் ஏற்பட்டு நோயைப் பிறப்பிக்கின்றது.

Dr. பொன் இராமநாதன் M.D.(S),Ph.D
சிரேஷ்ட விரிவுரையாளர்.
சித்த மருத்துவத்துறை,
யாழ் .பல்கலைக்கழகம்,கைதடி.

இவற்றில் இருந்து மனித உடம்பிற்கும் நவக்கிரகங்களுக்கும் இடையில் உள்ள தொடர்பை மருத்துவரீதியில் அறியக்கூடியதாகவுள்ளது. (முற்றும்)

# பவ்ரல் அமைப்பின் தலைவருக்கு இராஜதந்திரக் கடவுச்சீட்டு!

(கொழும்பு)

சுதந்திரமானதும் நேர்மையான துமான தேர்தலுக்கான தேர்தல் கண் காணிப்புக் குழுவின் (ப்வ்ரல்) தலைவர் கிங்ஸ்லி ரொட்டிக்கோ ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ராஜதந்திர கடவுச்சீட்டினு டனேயே தனது பிரயாணங்களை மேற் கொள்கின்றார்.

முன்னைய அரசாங்கம் இரண்டு வருடங்களுக்கு முன்பு இந்தக் கடவுச் சீட்டை அதாவது தற்போதைய நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பிரதமராக இருந்த காலத்தில் வழங்கியதாக பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்டிக்கோ சண்டேலீடர்க்குத் தெரிவித்துள்ளார்.

தான் சுதந்திரமான தேர்தல்களுக்கான ஆசிய வலைப்பின்னலின் செயலாளர் நாயகமாக தெரிவு செய்யப்பட்ட போது இக்கடவுச்சீட்டும் வழங்கப்பட்ட தாகக் கூறினார்.

இருந்தும் அண்மையில் மீளவும் அதே பதவிக்கு தேர்வு செய்யப்பட்டும் இது விளம்பரப்படுத்தப்படவில்லை. இவை பற்றி ஆடல் பாடல் எதுவும் தேவை யில்லை என்றும் கூறினார்.

பிரதான எதிர்க்கட்சியான யு என் பி பவ்ரல் அமைப்பு பற்றி, அரச சார்பாக செயற்படுவதாகவும் இதனைத் தமது க்ட்சி ஓர் சுதந்திரமான அமைப்பு என ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் கூறு கின்றது. சுதந்திர தேர்தலின் ஆசிய வலைப்பின்னல் அமைப்பின் பாங் கொக் பேச்சாளரான அடம் கூப்பர் சண்டேலீடருக்கு தெரிவிக்கையில், இத்தேர்தல் கண் காணிப்பாளர்களுக்கு வழக்கமாக ராஜதந்திர ஸ்தானம் வழங்கப்படு வதில்லை என்றும் அநேக அரசுகள் தங்களுக்கு விருந்தினர் விசாவுடன் பிரயாணம் செய்ய அனுமதிப்பதாகவும் கூறினார். இவை நாட்டுக்கு நாடு மாறுபடுவதாக கூறுனார். (அ-5)

# சித்தர் சிந்தனையில் நவக்கிரகங்களும் மனித உடம்பும்

அண்டத்தில் உள்ள கோல்களின் கதிர் வீச்சுக்கள் பூமியில் பாய்கின்றன. வானில் உள்ள கிரகங்கள் ஒளிப்பிளம் பாகவுள்ள சூரியன் என்ற எரி கோளில் இருந்து சிதறிய துண்டுகளேயாகும். இதனால் இவற்றை சூரிய குடும்பம் என்பர். இவற்றில் பூமி, சந்திரன், செவ்வாய், வியாழன், புதன், வெள்ளி, சனி ஆகிய கோள்கள் இடம்பெறு கின்றன. இக்கோள்கள் தம்மைத்தாமே சுற்றிக்கொள்வதோடு சூரியனையும் ஒரு குறிப்பிட்ட பாதையில் சுற்றி வருகின்றன. இக்கோள்கள் அன்றி யுரேனஸ், நெப்டியூன் , புளுட்டோ ஆகிய கோள்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன. இவை பின்பு கண்டுபிடிக்கப்பெற்றவை. இக்கோள்கள் யாவும் நீள் வட்டமாக வெவ்வேறு பாதையில் ஒரே திசையில் சூரியனை சுற்றி வருகின்றன. இக்குறிப்பிட்ட கோள்களுள் சூரியன் , சந்திரன் ,செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி , சனி ஆகிய 7 கோள்களை மிகப் பண்டைய காலம் தொட்டே நம் முன்னோர்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர். இந்த 7 கோள்களின் அடிப்படையிலேயே ஒரு வாரம் என்றும் கிழமை என்றும் (வடமொழி -வாரம் , தமிழ் மொழி- கிழமை) எழு நாட்களை கணித்துள்ளனர். யுரேனஸ் நெப்டியூன் புளுட்டோ ஆகிய கோள்களை நம் முன்னோர்கள் அறிந்திருக்கவில்லை. கி.பி. 15ஆம் நூற்றாண்டில் நிக்கிலஸ் கோப்னனீக்கஸ் (Nicholas Copernicus) என்பவர் கூறிய பின்னரே பூமியும் ஒரு கோள் என்பது அறிய முடிந்தது.

சூரியனும் சந்திரனும் பூமிக்கு நேர் கதியில் இயங்கும் போது இவ்விரண்டு கோள்களின் பக்கங்கங்களில் விழும் நிழல்களை இராகு, கேது என்பர்.

சூரியன் சந்திரன் முதலான கோள் களைப் போல் இவைதனிப்பட்ட கோள்கள் அல்ல ஆயினும் இவற்றை சோதிடக்கலையில் கோளமாகக் கணிக்கப்பெறுகின்றது.

சூரியனின் வடக்குத் தெற்கு பயணங்களை உத்தராயணம், தட்சிணாயணம் என்பர். தை மாதம் முதல் ஆனி மாதம் வரையுள்ள ஆறு மாதங்கள் உத்தராயணக் காலமா கும் . ஆடி மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரையிலுள்ள ஆறுமாதங்கள் தட்சிணாயணக்காலமாகும். தமிழர்கள் பல புண்ணியச் செயல்களையும் மங்கள நிகழ்வுகளையும் உத்தராயண காலத்தில் செய்ய விரும்புவர் எனவே உத்தராயண காலத்தில் உயிர் விடுதல் நல்லதெனப் பகவத் கீதை குறிப்பிட்டுள்ளது.

பாரதக்கதையில் பீஷ்மர் போரில் இறக்கின்ற நிலையில் தட்சிணாயணக் காலம் (மார்கழி) நிகழ்ந்ததாகவும் ஆதலால் அக்காலத்தில் உயிர் விடுதல் நல்லதன்று என எண்ணி தம் யோகவளத்தால் உயிரை நிறுத்தி உத்தராயணக்காலம் (தை) தொடங்கியவுடன் உயிர் விட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. எனவே உத்தராயண காலம் பல நல்வினைகள் ஆற்றுவதற்கேற்ற புண்ணிய காலம் ஆகும்.

மனிதன் உலகிலுள்ள தாதுப்பொருட்கள் , தாவரப்பொருட்கள் சங்கமப்பொருட்கள் எல்லாம் உண்டாவதற்கு ஏதுவாய் நின்ற ஐம்பெரும் பூதங்களின் செயற்கையால் ஆக்கப்பட்ட சிறியதோர் உலகம் என்று (சிற்றண்டம்) அறியக்கூடியதாகவுள்ளது. மனித உடலில் உள்ள ஒவ்வோர் உறுப்பும் அண்டத்தில் பரவி நிற்கும் கோள்களின் கதிர்களால் தாக்கம் ஏற்படுகின்றன என்பதை தத்துவரீதியில் கோள்களின் ஆட்சிக்கு உடல் உறுப்புகளை ஆட்டுவிக்கும் தன்மையுடையன எனக் கூறப்பட்டுள்ளது. கோள்களின் சக்தியில் சில எடுத்துக்காட்டுகள் கீழே அட்டவணையாகத் தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| சூரியன்- | இதயம், வயிறு, கண், தலைப்பகுதி | -பித்தநாடி |
| சந்திரன்- | மூளை (பிடரி) மார்பு | -வாதநாடி |
| செவ்வாய் - | பித்தப்பை, இரத்தம், எலும்பினுள்மச்சைபெண்களின் ஜனன உறுப்பு, கழுத்து | -பித்தநாடி |
| புதன்- | நுரையீரல் ,நரம்பு மண்டலம், தோல் | -வாதநாடி |
| குரு- | கல்லீரல் கொழுப்புச்சத்து, காது, தொடை | -வாதநாடி |
| சுக்கிரன்- | சிறுநீரகம், முகம் ,கருப்பையின் தன்மை கருமுட்டை உற்பத்தி | -கபநாடி |
| சனி- | மண்ணீரல், எலும்புகள் ,ரோமம் | -வாதநாடி |
| ராகு, கேது | கால்கள் | -பித்தநாடி |

மூன்றாவதாகக் குறிப்பிட்ட செவ்வாய்க் கோள் அண்டத்தில் இயங்கும் மிகபெரிய சக்தியாகும். இக்கோளில் இருந்து வெளியாகும் கண்ணுக்கு புலனாகாத சில கதிர் இயக்கங்களின் தன்மை,மனித உடலில் உள்ள இரத்தத்தில் காணப்படும் சில மூலப்பொருட் களின் தன்மையுடன் ஒத்துள்ளது. பூமியில் உள்ள உயிர்களின் இனப்பெருக்கத்துக்கும்,அண்டத்தில் உள்ள சுக்கிரன் என்னும்கோளுக்கும் தொடர்புண்டு.

இதனை சித்தர் கையேடு குறிப்பிடுகையில் சுக்கிரன் என்னும் கோள் உலக உயிர்கள் உய்வதற்குரிய சக்திகளை பரப்புகின்றது. இச்சக்தி செவ்வாய்க்கிரகத்தின் சத்தியை ஓரளவு தடைப்படுத்துகின்றது. இவ்வாறு இல்லை எனில் உலகில் உயிர்கள் தத்தம் இனங்களை பெருக்கும் இயல்பு அற்றுப் போகும். சுக்கிரன் என்னும் சக்தியினாலேயே ஆண், பெண்களுக்குள் பிரேமையும் அநுராகமும் ஏற்படுகின்றன.

அண்டத்தில் இருக்கும் சக்திகளின் இயக்கத்திற்கும் மகளீரின் மாதவிலக்கிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இது பற்றி மருத்துவ நூலில் அமவாசை, பௌர்ணமி ஆகிய நாட்களின் நோய் நிலை வேகம் கொள்கின்றது. சந்திரன் மூளையோடு தொடர்புபடுவதால் விசேடமாக மூளைக்கோளாறு காம உணர்வு அதிகமாதல் ,. கர்ப்பக்கோளாறு ஆகியன உண்டாகும் என்பதுடன் இது போல் செவ்வாய்க்கோளின் தாக்குதலினால் பெண்களுக்கு இரத்தக்குறைவு , நரம்புத்தளர்ச்சி ஆகியன உண்டாகும் எனவும் குறிபிடுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணைப்படி சூரியனின் சக்தியால் இதயம் பாதிக்கப்படுகின்றது என்பதனையும் இதய நோய் உள்ளவர்களுக்கு சூரிய வழிபாடுகளையும்,சாந்தி களையும் பின்பற்றுவதை வலியுறுத்தி இருப்பதையும் காணலாம் .

(7ஆம்பக்கம் பார்க்க)

## UNIVERSITY OF JAFFNA
## TENDER NOTICE

The Chairman, University procurement committee, university of Jaffna will receive sealed tenders from civil works contractors registered with ICTAD for the following works.

| work Details | Refundable deposit (Rs.) | Non refundable deposit (Rs.) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|
| Repairs/Improvements/ Painting Dept. of Dance ,RAFA, University of Jaffna. | 30,000.00 | 500.00 | M7 |
| Roof Repairs to Main Female Toilet,Eastern wing, University of Jaffna. | 4,000.00 | 500.00 | M9 |

Tender forms may be obtained from Senior Assistant Registrar/Capital Works &Planning University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above tender fees at the shroff 's Counter, Universty of Jaffna until 14.05.2008.

Perfected tenders should be sealed separately and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely,Jaffna or deposited in the tender box kept at Registrar's office, University of Jaffna.

Tenders will be accepted till 2 .00 p.m on 23.05.2008 and open at 2.30 p.m after the time of closing.

Tenderers or their accredited representatives could be present at the time of opening of tenders.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Capital works & Planning Branch of this University during office hours if necessary.

P.O. Box 57,
Thirunelvely,
Jaffna.
29.04.2008

Registrar
University of Jaffna

(C/1076)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பொன்னாவரசு

Botanical Name :- Cassia sophera
Family :- Caesalpiniaceae
English name :- Senna sophera

இது பெருஞ்செடி வகையைச்சார்ந்தது. 0.7-3m உயரம் வரை வளரக்கூடியது. இலைகள் நீள்வட்ட அல்லது வேலுருவானதாக இருக்கும். பூக்கள் மஞ்சள் நிறமுடையவை, சிறியவை. விதைகள் கடும்மண்ணிறம் உடையவை. யாழ் மாவட்டத்தில் பொதுவாக இம்மூலிகையின் பரம்பல் காணப்படினும், இனங்கண்டு கொள்ளாமையும், பயன்படுத்தாமையுமே இம் மூலிகைகள் அருகிவரக்காரணமாகும். விதைகள் மூலம் இம் மூலிகையை இனவிருத்தி செய்யலாம்.



பயன்படும் பகுதிகள்:- இலைகள் (leaves)
பட்டை(bark)
விதை(seeds)
வேர் (root)
வேர்ப்பட்டை(root bark)

மருந்துச்சத்துக்கள்:- Emodin
Chrysophanic acid
Flavone glycoside
Sennaside

மருந்துவச்செய்கை:- மலமிளக்கி(Laxative)
புழுக்கொல்லி (Anthelmintic)
அழுகலகற்றி(Antiseptic)

### பயன்பாடு

1. இதன்இலையை துவையல் செய்து, சோற்றுடன்கூட்டி உண்ண உடலில் உண்டாகும்வெப்பம் அனல் தணிந்து இலகுவில் மலம் கழியும். இதனை கடைந்தும் உண்ணலாம்.

2. இதன் இலைகளை பழச்சாறுவிட்டு அரைத்து வட்டக்கடிக்கு பூசலாம்.

3. காமாளை நோய்க்கு (Jaundice) இதன் உடன் இலைகள் கைப்பிடி அளவு எடுத்து 50ml நீரில் 15-20 நிமிடநேரம் ஊற வைத்து வடித்து காலையில் எடுக்கலாம்.

4. வட்டக்கடிக்கு இலைச்சாறுக்குப் பதில் இதன் வேரை பழச்சாறு விட்டரைத்தும் பூசலாம்.

5. இலை, வேர், வேர்ப்பட்டை, விதை இவைகள் எல்லாவற்றையும் சேர்த்து குடிநீர் தயாரித்து 30ml காலையில் கொடுக்க சிறுநீர் நன்கு கழியும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ் பல்கலைக்கழகம்,கைதடி

### குறிப்பு

சித்தமருத்துவ சிகிச்சைக் கிரமத்தின் அடிப்படையில்(line of treatment) குறிகுணங்களுக்கு மட்டுமன்றி நோய்க்கு காரணமான திரிதோஷங்களுக்கும் சிகிச்சைக் கிரமம் மிகுந்த பலனளிப்பது கண்கூடு. எமது சமுதாயத்தில் வட்டக்கடி (Ring worm investation) நோய் சில பிரதேசங்களில் பரவலாகக் காணப்படுவது அவதானிக்கப்பட வேண்டிய ஒரு விடயம். எனவே மேற்படி பொன்னாவரசு இலையை சாதாரணமாக நாம் அன்றாட உணவு முறையில் வாரத்திற்கு இரு முறையாவது துவையல்/பச்சடி/வறை போன்றவற்றில் ஏதாவது ஒரு முறையில் தயாரித்து, உணவுடன் சேர்த்து உட்கொள்வோமாயின் மலமும் இலகுவில் வெளிப்பட்டு தோல் நோய்களையும் குணப்படுத்தும். அதாவது தோல் வியாதிகளுக்கு காரணமான பித்ததோஷத்தை சமனப்படுத்துவதோடு, அந்நோயின் குறிகுணங்களையும் நீக்கி தோலை ஆரோக்கியமாகப் பேணிப் பாதுகாக்கும். எனவே இவ்விதைகளைச் சேகரித்து வீட்டுத்தோட்டத்தில் வேலியோரங்களில் பயிரிட்டு பயன்படுத்துவதோடு மட்டுமன்றி இம் மூலிகை அருகி வருவதையும் தடுக்கலாம்.

## யாழ் குடாநாட்டுச் சட்டத்தரணிகள் யாழ் குடாநாட்டு நீதிமன்றப் பணிகளைப் புறக்கணித்தல் பற்றிய அறிவித்தல்

2008.04.26 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடிய யாழ். குடாநாட்டுச் சட்டத்தரணிகள் எதிர்வரும் 2008.05.02 ஆம் திகதி வெள்ளிக்கிழமையிலிருந்து யாழ். குடாநாட்டிலுள்ள சகல நீதிமன்றப் பணிகளைப் புறக்கணிப்பதெனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளனர்.

2007.10.24 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் சட்டத்தரணிகளுக்கென வரைபடத்தில் ஒதுக்கப்பட்ட நூலகம், கட்சிக்காரர்களைச் சந்திக்கும் அறை, சிற்றுண்டிச் சாலை ஆகியவை இன்று வரை சட்டத்தரணிகளின் பாவனைக்கு வழங்கப் படாமையினால் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சாந்தா அபிமன்னசிங்கம் ஜ.ச
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் வடக்கு வலயத்திற்கான உபதலைவர்
Zonal Vice President (North) of the Bar Association of SriLanka

(1122)

> நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்.
> —, திருவள்ளுவர்

வலம்புரி

## ‘சுகவாழ்வு’ பொது விரிவுரை பொதுமக்கள் பயன்பெறவேண்டும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் ‘சுகவாழ்வு’ பொது விரிவுரைத் தொடர் ஒன்றுவிட்ட சனிக்கிழமைகளில் யாழ்.பல்கலைக்கழக, கைலாசபதி கலையரங்கில் நடைபெற்று வருகின்றது.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் கலைப்பீடாதிபதியாகவும், துணைவேந்தராகவும் இருந்த காலத்தில் 1993களில் ஆரம்பிக்கப்பட்ட புறநிலைப்படிப்புகள் அலகு யாழ்ப்பாண மக்களை பல்கலைக்கழகத்துடன் இணைத்துக் கொண்டது.

புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளராக பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் கடமையாற்றியிருந்தார்.

சுகவாழ்வு, அலுவலக முகாமைத்துவம், இதழியல், தொடர்பாடலுக்கான ஆங்கிலம், வானியலும் சோதிடமும் போன்ற பல துறைகளில் பொதுவாகவும் வரையறுக்கப்பட்டதுமான விரிவுரைகள் இடம்பெற்றன.

இதனால் யாழ்ப்பாணத்தில் இருக்கக் கூடிய துறைசார் வல்லுநர்களின் அறிவை ஏனையவர்கள் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டியதுடன், துறைசார்ந்தவர்களின் வாண்மையை யாழ்ப்பாண [illegible] சமூகத்துடன் இணைத்துக் கொடுத்ததெனக் கூறிக் கொள்ளலாம்.

இருந்தும் சில காலம் புறநிலைப் படிப்புக்கள் அலகின், செயலாக்கம் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. தற்போது பேராசிரியர் என்.சண்முகலிங்கன் துணைவேந்தராக பதவியேற்றதைத் தொடர்ந்து புறநிலைப் படிப்புக்கள் அலகு மீண்டும் உயிர்ப்பு பெற்றுள்ளது. இது மிகப்பெரும் பயனாக,ஒன்றுவிட்ட சனிக்கிழமைகளில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ‘சுகவாழ்வு’ பொது விரிவுரையைக் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலுள்ள வைத்திய நிபுணர்கள் கலந்து கொண்டு விரிவுரை ஆற்றுவது மிகப்பெரும் வரப்பிரசாதம் ஆகும்.

பொதுவாக மக்களிடையே நோய்கள் அறியாமையினாலும், போதிய விளக்கமின்மையாலும் ஏற்படுகின்றன.

அதேநேரம் நோய் ஏற்பட்டு விட்டால் அதற்கான மருத்துவ சிகிச்சை பற்றிய விளக்கமின்மையும் நோய்க்கான அறிகுறிகளைத் தெரிந்து கொள்ளாமையுமே நோயின் பாதிப்பு உச்சமடையக் காரணமாக இருக்கின்றது.

எனவே நோய் வந்தபின்னர் அதற்கான சிகிச்சையை நாடுவதை விட நோய் வருமுன்னர் அது பற்றிய விளக்கங்களை தெரிந்து கொள்வது சாலச்சிறப்புடையதாகும்.

அதிலும் யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்திய நிபுணர்கள் பங்குபற்றி விளக்கமளிக்கும் சுகவாழ்வு பொது விரிவுரையானது எவ்விடத்திலும் பெறமுடியாத பயன்மிக்க கருத்தரங்காகும்.

பொது மக்களின் நலனை மையமாக வைத்து யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் பிரிவினரால் முன்னெடுக்கப்படும்.

இக்கருத்தரங்கில் பொதுமக்கள் கலந்து கொண்டு சுகம் பற்றிய அறிவைப் பெறுவதே பயனுடையதாகும்.

இத்தகைய கருத்தரங்குகளில் பொதுமக்கள், மாணவர்கள் பங்குபற்றி பயன்பெற வேண்டுமென்பது அன்பான வேண்டுதலாகும்.

# மசகு எண்ணெயின் விலை 120 டொலர்களாக உயர்வு மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்படலாம்

## ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

எரிபொருள் விலை உலகசந்தையில் பரலொன்று120 டொலர்களாக உயர்ந்துள்ள நிலையில் உலகில் மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்படுமென பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை, எண்ணெய்விலை பரலொன்றுக்கு 200 டொலர்களாக உயர்வதற்கான சாத்தியத்தையும் நிராகரிக்க முடியாதென சில ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

கடந்த வருடத்திலும் பார்க்க ஏறக்குறைய மசகு எண்ணெய் விலை இருமடங்காக அதிகரித்திருக்கிறது. உண்மையான பெறுமதியிலும்பார்க்க சந்தைப் பெறுமானம் மிக அதிகளவுக்கு உயர்ந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தியா, சீனா போன்ற வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளின் தேவைகள் அதிகரித்துவருவதால் இந் நாடுகளில் மசகுஎண்ணெய்க்கான கேள்வியும் அதிகரித்துள்ளது.

பாரசீக குடாவில் அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்தின் ஒப்பந்தக் கப்பல் படகுகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக வெளியான செய்திகளையடுத்து மசகு எண்ணெய் விலை பரலொன்றுக்கு 120 டொலராக அதிகரித்திருக்கிறது. இந்தப் படகுகள் ஈரானுடையதாக இருக்கக்கூடுமென தெரிவிக்கப்படுகிறது. நைஜீரியாவில் எண்ணெய்க் குழாய் மீதான தாக்குதல் மற்றும் ஸ்கொட்லாந்தில் எண்ணெய் வடிகட்டல் துறைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் என்பவற்றால் ஏற்கனவே எரிபொருள் சந்தையில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஒபெக்நாடுகள் தமது எண்ணெய் விநியோகத்தின் அளவை அதிகரிக்க வேண்டும் எனும் கோரிக்கைகள் வலுப்பெற்று வரும் நிலையில், தேவையான எண்ணெயை தாங்கள் விநியோகித்து வருவதாக ஒபெக் நாடுகள் கூறுகின்றன.

அதேவேளை, பணவீக்க அதிகரிப்பு, அமெரிக்க பொருளாதாரத்தில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு விலைமனுவை வர்த்தகர்கள் அதிகளவுக்கு முன்வைப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதே சமயம் அடுத்த இரு தசாப்தங்களில் உலக எரிபொருள் தேவை 50 சதவீதத்தால் அதிகரிக்குமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

டொலரின் பெறுமதி பலவீனமடைந்திருப்பதும் எரிபொருள் உற்பத்திநாடுகளில் ஏற்பட்டிருக்கும் அரசியல் ஸ்திரமின்மையும் எந்தவொரு காலத்திலும் மசகு எண்ணெயின் விலை 100 டொலருக்குக் குறைவாக வீழ்ச்சியடையப் போவதில்லையென கூறப்படுகிறது.

2010இல் 110 டொலராக மசகு எண்ணெய் விலை இருக்குமெனவும் ஆனால் விநியோகத் தில் இடையூறு ஏற்பட்டால் 200 டொலராக அதிகரிக்கும் சாத்தியத்தை நிராகரிக்க முடியாதெனவும் டெக்ஸாஸ் பல் கலைக்கழக பொருளாதாரப் பேராசிரியர் ஜோன் மொரோனி கூறியுள்ளார்.

(அ-5)

## சுகாதார சேவை பணியாளர்களுக்கு நடமாடும் ஊழியர் பொதுச் சேவை

### டாக்டர் ஆ.கேதீஸ்வரன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கி வரும் வைத்திய நிறுவனங்களில் சேவை புரிந்துவரும் சகல உத்தியோகஸ்தர் மற்றும் ஊழியர்களின் பிரச்சினைகளை அறிந்து அவற்றுக்குத் தீர்வு காணும் நோக்குடன் நடமாடும் ஊழியர் ஆய்வு சேவை ஒன்று நடத்தப்படவுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் விரைவில் இந்த ஊழியர் ஆய்வு சேவையை ஆரம்பித்து நடத்தவுள்ளதாக மேற்படி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த நடமாடும் ஊழியர் ஆய்வுச் சேவை எதிர்வரும் மே மாதம் ஆரம்பிக்கப்படும். யாழ். மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகள் 5 வலயங்களாக பிரிக்கப்பட்டு அவ்வவ் வைத்திய நிலையங்களில் வைத்து ஊழியர்கள் உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் சகலதும் ஆராயப்பட்டு தீர்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

ஊழியர்களின் சுயவிபரக் கோவைகளை பூர்த்தி செய்தல் மற்றும் அவர்களது ஓய்வூதியக் கொடுப்பனவுகளை விரைவில் பெற்றுக்கொடுப்பதற்கான உரிய நடவடிக்கைகள் யாவும் இந்த நடமாடும் சேவையில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்நடமாடும் சேவையில் நிர்வாக உத்தியோகத்தர், கணக்காளர் மற்றும் பிரச்சினைகளுடன்தொடர்புபட்ட துறை சார்ந்த ஊழியர்கள், உயரதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர் எனவும் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

(அ-5)

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசைத் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)


திருநாவுக்கரசு நாயனார் குருபூசைத் தின நிகழ்வு இன்று காலை 8 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் செல்வி சீ.மகிந்தினி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வினை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயமும் இணைந்து நடத்துகின்றது.

இதில் சிறப்பு விருந்தினராக பாடசாலை அதிபர் கு.சிவானந்தம் கலந்து கொள்ளவுள்ளார். விசேட பூஜை, சிறப்புச் சொற்பொழிவு, மாணவர்களின் கலை நிகழ்வுகள், குருபூசை தினத்தையொட்டி இடம்பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(ச-2)

## வைட் பீல்ட் ஆச்சிரமத்தில் சாயி பாபா ஓய்வு



(சென்னை)

பகவான் சத்திய சாயி பாபா புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தில் இருந்து பெங்களூர் அருகே உள்ள வைட் பீல்ட் ஆச்சிரமத்தில் ஓய்வெடுப்பதற்காக சென்றார்.

கடந்த சனிக்கிழமை அன்று பெங்களூருக்கு புறப்படமுன் பிரசாந்தி நிலையத்தில் கூடியிருந்த பக்தர்களுக்கு சிறப்புத்தரிசனம் அளித்த பின்னர் அவர் ஆச்சிரமத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் சத்திய சாயி கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்கள் சகிதம் வைட் பீல்ட் ஆச்சிரமத்தை நோக்கி புறப்பட்டார்.

(அ-5)

## க.பொ.த. உ/த பரீட்சை 2007 மீள் பரிசீலனைப் பெறுபேறுகள்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மீள் பரிசீலனைப் பெறுபேறுகளில் மாற்றமில்லாத மாணவர்களின் பெறுபேறுகள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பெறுபேறுகளில் மாற்றம் ஏற்பட்ட மாணவர்களின் பெறுபேறுகள் அடுத்த வாரம் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் மீள்பரிசீலனைப்பெறுபேறுகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். இதேவேளை தமக்கு இதுவரை மீள் பரிசீலனைப் பெறுபேறுகள் கிடைக்கவில்லையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுதெரிவித்துள்ளது.

மீள் பரிசீலனைப் பெறுபேறுகள் கிடைக்கப் பெற்ற பின்னர் பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகளை வெளியிடவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

(அ-7)

## ஓலைச் சுவடிகள் 23 — தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

### நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

**சங்கூதுவதின் மகத்துவம் என்ன?**

சங்கொலியின் மகிமையைப் பற்றி சாஸ்திரத்திலும் ஆசாரவிதிகளிலும் பலவாறு கூறப்பட்டுள்ளது. பொதுவாக கோயிலில் சங்கொலியைக் கேட்டிருக்கின்றோம். தீபாராதனை வேளையில் மந்திரம் ஜெபிக்கும் ஒலி,மணி ஓசை மற்றும் சங்கொலி என்பவை காதில் கேட்கும் போது தெய்வ விக்கிரங்களுக்கு முன் தீபச் சுடர் உயர்வதைக் காணும் போதும் பக்தரில் பரவசம் நிறைவதும் மனதில் நிம்மதி பிறப்பதையும் நாம் உணர்ந் திருக்கின்றோம்.

இறைவனைச் சார்ந்த ‘ஓம்’ எனும் மங்கள ஓசையே சங்கிலிருந்து எழும்புகின்றது. குருஷேத்திர யுத்தத்தின் ஆரம்ப போர்க் களத்தில் எழுப்பக்கேட்ட சங்கொலி, அறிந்தவர் மனதிலிருந்து ஒருபோதும் மறைவதில்லை. சங்கை உரைத்து சில நோய்களுக்கான மருந்துக் கலவையில் சேர்ப்பதுண்டல்லவா ! இதிலிருந்து சங்கில் ஓர் தனிப்பட்ட மருத்துவ குணம் இருப்பதை அறியலாம்.

சங்கிலிருந்து உயரும் ஒலி அலைகளில் பெற்றுக்கொள்பவரின் மூளையில் பயன்தரும் அதிர்வுகள் உண்டாகும் என்று நவீன சாஸ்திரம் கூறுகின்றது.

# ஜெயராஜ் கொலைச் சந்தேக நபர் மர்மமான முறையில் மரணம்

(கொழும்பு)

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே படுகொலையைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட தமிழ்ப் பெண் ஒருவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது மர்மமான முறையில் மரணமடைந்துள்ளார்.

ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கொலையை அடுத்து கொழும்பில் கைது செய்யப்பட்டிருந்த ராணி என்ற பெண் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. தொடர்ந்து அவரைத் தடுத்து வைத்து குற்றத்தடுப்பு புலனாய்வுப்பிரிவினர் சித்திரவதை செய்துள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

அப்பெண்ணின் சடலம் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைக்கு பின்னர் அவரது மரணத்துக்கான காரணம் தெரியவரும் என்று பொலிஸ் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான என்.கே.இலங்கக்கோன் தெரிவித்துள்ளார். (ச-5)

# மனிதாபிமான பணிகளுக்காக ஐ.நா. 850 மில்.டொலர் நிதியுதவி

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இலங்கையில் மேற்கொள்ளவுள்ள மனித நேயப் பணிகளுக்காக ஐக்கிய நாடுகள் சபை 850 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி நெகில் புகுனே; பாதிக்கப்பட்ட மக்களின் கல்வி, சுகாதார அபிவிருத்திக்காகவும் மனிதாபிமானத் தேவையை பூர்த்தி செய்யவும் கடந்த 6 தசாப்த காலமாக அரசாங்கம் எமக்கு வழங்கி வரும் ஒத்துழைப்புக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உதவி வழங்கும் நாடுகள் வழங்கும் நிதியுதவிகளைக்கொண்டு உலக உணவுத் திட்டம், யுனிசெவ் உள்ளிட்ட ஐ.நாவின் முகவர் நிறுவனங்கள் இலங்கையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றன.

ஐ.நாவின் முகவர் நிறுவனங்களுக்கு எதிராக சில தரப்பினர் அநீதியான முறையில் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்ற போதிலும் அரசாங்கம் ஐ.நாவின் செயற்பாட்டுக்கு நேரடியாக ஆதரவு தெரிவித்திருப்பது எமக்கு திருப்தியை அளிக்கின்றது.

இந்த நிலையில் எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் இலங்கையில் மேற்கொள்ளவுள்ள மனிதாபிமான புனரமைப்பு நிவாரணப் பணிகளுக்காக ஐக்கிய நாடுகள் சபை 850 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கியுள்ளது என்றார். (ச)

## புலிகளின் மதியுரைஞர்...

மேற்படி தகவல் பிரிவு தெரிவிக்கின்றது.

அண்மைக்காலங்களாக விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காகன பல கருத்துக்களை வெளிப்படுத்தி வரும் வை.கோ கடந்த சில தினங்களுக்கு முன் இந்தியப் பிரதமரை சந்தித்து விடுதலைப் புலிகள் சார்பில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அத்துடன் விடுதலைப் புலிகள் சார்பில் கலந்துரையாடும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளரையும் வை.கோ சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக அவரைக் கௌரவிக்கவே மதியுரைஞர் பதவியை வை.கோவுக்கு வழங்க புலிகள் தீர்மானித்துள்ளனர்.

இவை எவ்வாறாயினும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ள போது வை.கோ இப்பதவியை ஏற்றுக்கொள்வது அவருக்கெதிராக இந்திய அரசாங்கம் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு வழிவகுக்கும் என்பது குறிப்பிடத்தக்கது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## இலங்கை விஜயத்தை ...

நாள்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள், அரசியல் முக்கியஸ்தர்கள், மதத்தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கையின் பொருளாதாரத்தை கட்டி எழுப்புதல் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை மேம்படுத்துதல் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஈரானுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது இரு நாடுகளுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட வர்த்தக கப்பல் ஒப்பந்தம், உமா ஓயா திட்டம், எண்ணெய் சுத்திகரிப்பு வேலைத் திட்டம், ஈரான் இஸ்லாமிய வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கிடையிலான உறவை மேம்படுத்துதல், நிதி மற்றும் இலத்திரனியல் மேம்பாடு உள்ளிட்ட 8 ஒப்பந்தங்களை முன்னெடுத்துச் செல்வதில் அதற்கான நிதியுதவிகளைத் திரட்டிக் கொள்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

ஈரான் ஜனாதிபதி தலைமையிலான குழுவினரின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு கொழும்பு மற்றும் அண்டிய பகுதிகளில் பாதுகாப்பு பன்மடங்காக பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவர் பயணம் செய்த வீதிகளில் இருமருங்கிலும் ஆயுதம் தரித்த படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## ஜே.வி.பியின்...

புதிய அரசியல் கட்சி தோற்றம் பெறும். அத்துடன் ஜே.வி.பியின் அதிருப்திக் குழுவினரும் இந்தக் கட்சியில் இடம்பிடிப்பர்.

அதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சியிலும் சிறிலங்க சுதந்திரக் கட்சியிலும் உள்ள அதிருப்தியாளர்களின் ஆதரவும் புதிய அரசியல் கட்சிக்கு கிடைக்கவுள்ளது.

ஜே.வி.பிக்குள் மீண்டும் நான் இணைந்து கொள்ள வேண்டுமானால் கட்சிக்குள் இருந்தவாறு சதி செய்யும் மூன்று பேர் கட்சியிலிருந்து வெளியேற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (ச-5)

## மேர்வின்...

இவ்விபத்தினால் அமைச்சர் மேர்வின் சில்வாவின் காலில் முறிவு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் உடனடியாக உலங்குவானூர்தி மூலம் கொழும்புக்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## இலங்கை - ஈரான் உறவால்...

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; தெற்காசிய நாடுகள், அணுசக்தி நடவடிக்கைகள் தொடர்பில் ஐ.நா. பாதுகாப்புச் சபை விதித்துள்ள நிபந்தனைகளை ஏற்குமாறும், ஈராக் விவகாரத்தில் தலையிடுவதைத் தவிர்க்குமாறும் ஈரானிய ஜனாதிபதியிடம் கலந்துரையாடப்படும் என நம்புகின்றோம்.

அத்தோடு ஹமாஸ், ஹிஸ்புல்லா உள்ளிட்ட தீவிரவாத அமைப்புக்களுக்கு உதவியளித்தல் போன்ற உபயோகம் அற்ற செயல்களை நிறுத்துமாறும் இந் நாடுகள் ஈரானிடம் கேட்டுக் கொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

ஈரான் தொடர்பில் அமெரிக்கா கடைப்பிடித்து வரும் கொள்கைகள் மிகவும் தெளிவானதும் வெளிப்படையானதுமாகும். நாம் எந்த நாட்டிடமோ வேண்டுகோளையோ, உத்தியோகபூர்வ செய்திகளையோ இது தொடர்பில் அனுப்பவில்லை.

ஏனெனில் எமது கொள்கைகளை சகல நாடுகளும் நன்கு அறியும். ஈரான் ஜனாதிபதி மஹமூட் அஹமட் நிஜாத் தனது தெற்காசிய விஜயத்தின்போது பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றில் பாகிஸ்தானும் இலங்கையும் அமெரிக்காவிடமிருந்து அதிகளவான உதவிகளைப் பெற்று வருவதோடு இந்தியா, அமெரிக்காவுடன் அணுசக்தி செயற்திட்டங்கள் குறித்து ஒப்பந்தம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ச-5)

# இலங்கை நாடாளுமன்ற வளாகத்தி[ல்] இந்தியச் சிப்பாய்களின் நினைவுத் தூ[பி]

இலங்கையில் விடுதலைப் புலிகளுடன் மோதலில் ஈடுபட்டவேளை உயிரிழந்த இந்திய அமைதிப் படையினரின் நினைவாக நாடாளுமன்ற வளாகத்தினுள் அமைக்கப்பட்டு வரும் நினைவுத் தூபி, வெகு விரைவில் திறந்து வைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மே மாதம் 22 ஆம் திகதி அல்லது சார்க் உச்சி மாநாட்டுக்காக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் போது இது திறந்து வை...லாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மிகுந்த நுட்பங்களுடன் நிர்மா...பட்டுவரும் நினைவுத்தூபியில் இந்...திப்படையைச் சேர்ந்த ஆயிரத்து 50... பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இலங்கைக் கடற்படை இதனை ந...கும் பொறுப்பை முன்னெடுத்து வரு... குறிப்பிடத்தக்கது.

# பிரசாரக் கூட்டத்தில் ரன...

திருகோணமலை மாவட்டத்தில் இந்திய உதவியுடன் அமைக்கப்படவிருக்கும் அனல் மின்நிலையத்தை சம்பூரில் அல்லாமல் ஏற்கனவே திட்டமிட்டபடி பவுல் முனையில் அமைக்க முயற்சி எடுக்கப்போவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில், கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கூட்டணி இந்த மாகாண சபைத் ... வெற்றி பெற்றால் இந்திய அதி... பேசி ஏற்கனவே திட்டமிட்டபடி ... நிலையத்தை பவுல் முனையி... போம் என்றும் சம்பூரையும் அ... டிய 23 கிராமங்களையும் ... பெயர்ந்த 17ஆயிரம் மக்க... ளது சொந்தக் கிராமங்களி... றம் செய்வோம் என்றும் ...

அத்தோடு இனப்பிரச்சி... அனைத்து சமூகங்களும் ஏ... வையே தாம் முன்வைப்போ... விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## மூலிகை மருத்துவக் கண்காட்சி மேலும் இரு நாள்களுக்கு நீடிப்பு

சித்தமருத்துவத்துறை மாணவர் ஒன்றியம், யு.என்.டி.பி யின் ஆதரவுடன் நடாத்தும் மூலிகை மருத்துவக்கண்காட்சி மேலும் இரண்டு நாள்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க எதிர்வரும் இரண்டாம், மூன்றாம் திகதிகளிலும் கண்காட்சி நடைபெறும் என சித்த மருத்துவத்துறை மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (ச)

## கொக்குவிலில்...

மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. இச் சம்பவத்தில் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த குணரட்ணம் சுகந்ததீபன் (வயது-27) என்ற இளைஞனே சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (எ-5)

## போராளிப் பாட... சிலம்பரசன் வீரச்...

(கிளிநொச்சி)

'ஆண்டாண்டு காலமதாய் நா... வந்த பூமி' போன்ற இசைப் பாட... பாடிய குட்டிக்கண்ணன் என்றழை... போராளி சிலம்பரசன் வீரச்சாவ... தாக விடுதலைப் புலிகள் தெரிவித்...

தமிழீழ விடுதலைப் போராட்டத்தி... டம் விடுதலைக் கருத்தை கட்டி வ... எழுச்சி ஊட்டவும் தனது சிறுவயது மு... குரலால் பாடல்கள் மூலம் எழுச்சி ஊ... குட்டிக்கண்ணன்.

1990 களின் பிற்பகுதியில் தெரு... குகளில் மக்கள் முன் இசைப்பாட... [illegible] னர் பாடல் தொகுப்புக்களில் பாட... பாடியுள்ளார் என விடுதலைப் புலி... வித்துள்ளனர்.


BOC இலங்கை வங்கி

**மீட்கப்படாத அடகு நகைகள[ின்] பகிரங்க ஏல விற்பனை**

**யாழ்.மாவட்டத்திலுள்ள பின்வரும் இலங்கை வங்கிக் கிளைக[ளில்] 31.12.2006 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் 30.06.2007 இற்கு [முன்]னர் 06 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவு[ம் பகி]ரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.**

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திக[தி] இடம்,நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக் கிளை | யாழ்ப்பாணம் மேற்தரக்கிளை யாழ்ப்பாணம் 2008 மே மாதம் 17 ம் (சனி), 18 ம் (ஞாயிறு) திகதிகளில் காலை 9.3[0] மணிக்கு |
| யாழ்.2ம் மேற்தரக் கிளை | |
| காரைநகர் | |
| திருநெல்வேலி (கோப்பாய் விரிவாக்கற் கிளை உட்பட) | |
| சுன்னாகம் (அச்சுவேலி விரிவாக்கற் கிளை உட்பட) | |
| மானிப்பாய் (சங்கானை விரிவாக்கற் கிளை உட்பட) | |
| காங்கேசன்துறை | |
| நெல்லியடி | |
| பருத்தித்துறை | |
| சாவகச்சேரி | |

**இந்த ஏல விற்பனையை ஒன்றிணைக்கும் அல்லது இரத்துச் செ[ய்யும்] அதிகாரம் வங்கிக்கு உண்டு.**

**உதவிப் பொது முகாமையாளர்**
**இலங்கை வங்கி (வடபிராந்தியம்)**

**தொலைபேசி இல.:-** **உதவிப் பொது முகாமையாளர் காரியா[லயம்]**
**021 222 3126** **ஆஸ்பத்திரி வீதி,**
**021 222 2735** **யாழ்ப்பாணம்.**


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.04.2008இல் அச்சிட்டு வெளியி[டப்பட்டது]